Registered as a News Paper in Sri Lanka

சமூக அரசியல் மாத இதழ்




# கண்ணோட்டம்

KANNODDAM

வெளியீடு :- 85 | செப்ரெம்பர் 2017 | விலை ரூபா :- 20.00


## முதலமைச்சரின் முன்னெச்சரிக்கை

# சங்கடத்தில் தமிழரசுக் கட்சி



ஓய்வுபெற்ற நிம்மதி, கந்தபுராணம், கம்பன் விழா, பிரேமானந்தா குருபூசை என்றிருந்த விக்கினேஸ்வரனை "சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி" என்ற கணக்கில் சம்பந்தனும் சுமந்திரனும் வடக்கு மாகாணசபைக்கு முதலமைச்சராக்கினார்கள் வடக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்றுவேன், காணாமற்போனோரை கண்டுபிடிப்பேன், போரில் உறவுகளை இழந்து குடும்பப் பொறுப்புக்களைச் சுமக்கும் பெண்களுக்கெல்லாம் மறுவாழ்வு தருவேன் என்று மேடைக்கு மேடை முழங்கி தேர்தலில் வெற்றி பெற்ற விக்கினேஸ்வரன் மஹிந்த ராஜபக்ஸாவின் ஆசியுடன் முதலமைச்சர் பதவியை ஏற்றார். தன்னை தூக்கிய சம்பந்

( தொடர்ச்சி 11 ஆம் பக்கம் பார்க்க )






மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் உள்ள மயானங்கள் அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை மேலெழுந்திருப்பதுடன் புன்னாலைக்கட்டுவன், புத்தூர் ஆகிய இடங்களில் தீவிரமாக முன்வைக்கப்படுகிறது.

## 27 ஆவது தியாகிகள் தினம் -பிரான்ஸ்

பிரான்சில் 27 ஆவது தியாகிகள் தின நிகழ்வுகள் 23.07.2017 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. தோழர் அலெக்ஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் திருமதி முத்துக்குமார் விளக்கேற்ற அஞ்சலி நிகழ்வுகள் ஆரம்பமாகின. தோழர்கள் ஜோதி. முத்துக்குமார் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர் உயிர் நீத்த தோழர்களை நினைவுகூர்ந்தும். இந்திய -இலங்கை ஒப்பந்தம் அதன் வழியாக வந்த வடக்கு -கிழக்கு மாகாணசபையை ஸ்தாபித்ததில் கட்சியும் தோழர்களும் வகித்த முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரம் சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பில் உரையாற்றினர்.




### சுத்தமான, சுகாதாரமான, பசுமையான

## யாழ்ப்பாணம் வேண்டும்




எங்களுடைய வீட்டில் சேரும் குப்பைகளை நாம் குடியிருக்கும் காணிக்கு வெளியே போட்டுவிட்டால் நாங்கள் சுத்தமான, சுகாதாரமான இடத்தில் சீவிக்க முடியும் என்று எண்ணுவது எவ்வளவு அறிவீனம்.

தெருமுனையில் கண்டபடி கொட்டப்படும் குப்பைகளால் மாநகர சபை ஊழியர்களின் நேரமும், உழைப்பும் விரயமாவதுடன் அவற்றை அகற்றும் சுகாதாரத் தொழிலாளர்கள் மிகுந்த அசௌகரியங்களுக்கு உள்ளாகுகின்றனர். இதனால் அவர்கள் நோய்த் தாக்கங்களுக்கு ஆளாவதும் தவிர்க்க முடியாததாகும்.

முறைப்படி அகற்றப்படாத கழிவுகளால் நிலம், நீர், காற்று என நாம் வாழும் சூழல் மாசுபடுத்தப்படுவதால் இதன் விளைவுகளை, பாதிப்புக்களை படிப்படியாக நாமும் எதிர்கொள்ள நேரும் என்பதை சிந்திக்கத் தவறுகிறோம். எம்மைச் சூழ உள்ளவர்களை நோயாளிகளாக்கிவிட்டு நாம் மட்டும் சுகதேகிகளாக வாழ முடியாது.

"இங்கே குப்பை போட வேண்டாம்" என்ற யாழ் மாநகர சபையின் அறிவிப்பு பல இடங்களில் காணப்படுகிறது.

மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுக்கும் மாநகர சபை நிர்வாகம் சுத்தமான சூழலை பராமரிப்பது தொடர்பாக அதன் கடமைகளை சரிவர நிறைவேற்றுகின்றதா? என்பது மக்கள் மத்தியில் உள்ள பெரும் கேள்வியாகும்.

( தொடர்ச்சி 11 ம் பக்கம் )

இந்தியாவை தவிர்க்க சீனப் பொறிக்குள் சிக்கிய இலங்கை
பக்கம்-03



முன்னாள் முதல்வர் வரதராஜப்பெருமாள் செவ்வி
பக்கம்-04



புலிகள் மீதான விமர்சனங்கள் தொடர்வது சரியா?
பக்கம்-06



சமுர்த்தி பயனாளிகள் கலகம்
பக்கம்-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணோட்டம்
KANNODDAM

sdptoffice@gmail.com

294 A. கண்டிவீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 2222022




## மக்களை இரண்டாம் பட்சமாகக் கருதும் ஊடகங்கள்

சம்பந்தர் சமரசவாதியாகிவிட்டாரா? விக்கினேஸ்வரன் தமிழ்தலைவர் ஆவாரா? இங்கு துரோகிகள் யார்? தமிழர் மீது பற்றாளர்கள் யார்?

இவ்வாறு தனிப்பட்ட தமிழ் தலைவர்களைச் சுற்றியும் இரண்டு தேசம் சுயநிர்ணயம் ஜெனிவா சர்வதேச விசாரணை என்ற சொற்பதற்களுடன் மாத்திரம் பெருமளவிற்கு தமிழ் ஊடகங்கள் எனப்படுபவை காலம் தள்ளுகின்றன.

மக்களின் ஜீவாதார அத்தியாவசிய பிரச்சனைகள் இங்கு எமது ஊடகங்களில் அந்தளவிற்கு ஒரு பொருட்டாக இல்லை.

வெறுமனே அவநம்பிக்கையை விதைப்பதை அனேகமான தமிழ் ஊடகங்கள் தமது பொதுப் போக்காக கொண்டிருக்கின்றன.

எமது ஊடகங்களில் சமூக பொருளாதார விடயங்களைத் தொடுவது அரிதிலும் அரிது என்பது துரதிஸ்டமான உண்மையாகும்.

இருக்கும் யதார்த்த நிலைகளில் அரசியல் அதிகாரப் பகிர்வு

இலங்கையின் இன சமூகங்களிடையே புரிந்துணர்வு

இராணுவத்திடம் உள்ள மக்களின் நிலங்களை மீட்பது.

பொதுவாகவே நிலம், வீடற்ற மக்களின் பிரச்சனைகள்

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, வீடு உள்ளிட்ட பிரச்சனைகள்

சுற்றாடல் பிரச்சனைகள்

கழிவு, குப்பை மேடுகள், டெங்கு இந்த சவால்களுக்கான தீர்வுகள்

நீர் முகாமைத்துவம்

பெண்கள் தலைமைதாங்கும் குடும்பங்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள்

சமூக நீதி மறுக்கப்பட்ட விழிம்புநிலை மக்கள்

வேலையற்றோர் பிரச்சனைகளுக்கான தீர்வுகள்

வன்முறை பலாத்காரம் இவற்றுக்கான தீர்வுகள்

ஈழத் தமிழ் ஊடகங்களைப் பொறுத்தவரை சுவாரசியம் அற்றவை.

மக்கள் அன்றாடம் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்பாக உணர்வு பூர்வமான ஆக்கபூர்வமான பார்வை அவசியப்படுகிறது. சமூகப்பொறுப்பு என்பதை விட வம்பளப்பது தான் ஊடகங்களின் பிரதான பணியாக இருக்கிறது.

என்ன செய்யப்பட வேண்டும் என்பது சொல்லப்படுவதில்லை. அதனை சொல்வது ஊடகங்களின் கடமை

உலகில் பரவலாக பெருவாரியான ஊடகங்கள் மக்களின் ஜீவாதார நலன்களையே முன்நிறுத்துகின்றன.

ஆனால், நமது ஊடகங்கள் அவ்வாறு மக்களின் பிரச்சினைகளை முன் நிறுத்தவில்லை என்றில்லை.

ஆனால், தற்போது குடுமி பிடிச்சண்டைகளே ஊடகங்களில் தூக்கலாக இருக்கின்றன.

இந்த தலைவர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள்.

உருப்படியாக மக்களுக்கு பணியாற்றி இருக்கிறார்களா என்ற கேள்வி இருக்கிறது

மக்களுக்கு பயன்படாத அரசியல் சக்திகளின் திருவிளையாடல்களும் கழுத்தறுப்புக்களும் அம்பலப்படுத்தபட வேண்டும்.

மக்களின் பிரச்சனைகள் - முகங்கள் முன்நிறுத்தப்பட வேண்டும்

# தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி
**Social Democratic Party of Tamils (S.D.P.T)**

## அரசியற் திட்டம்

2016 ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெற்ற கட்சிக் காங்கிரஸினால் அங்கீகரிக்கப்பட்டது.

( தொடராக பிரசுரிக்கப்பட்டு வரும் கட்சி அரசியற் திட்டத்தின் 9 ஆம் பாகம் )

### 23. பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் இச்சட்டத்தின் கீழ் சிறையில் இருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாக :-

இந்த நாடு 1971ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரை அவசரகால சட்டத்தின் கீழ் எதேச்சாதிகார ஆட்சி முறை யில் ஆளப்பட்டது. மேலும், அந்த எதேச்சாதிகாரத்தோடு 1979 ஆம் ஆண்டு பயங்கரவாத தடைச்சட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து இந்த நாட்டு மக்கள் அரச பயங்கரவாதத்தை எதிர்நோக்க வேண்டியவர்களாகவும், அடிப்படையான மானுட சுதந்திரங்கள், சமூக மற்றும் தனி மனித உரிமைகளை இழந்தவர்களாகவும் வாழ வேண்டிய நிலைக்கு உள்ளாக்கப்பட்டனர். இந்த பயங்கரவாதச் சட்டம் பல்லாயிரக் கணக்கானவர்களை – பெரும்பாலும் தமிழ் இளைஞர்களை பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தி அரசியற் கைதிகளாக, திட்டவட்டமான குற்றம் எதுவும் சாட்டப்படாமலும், நீதிமன்றம் எதிலும் வழக்குகள் நடாத்தப்படாமலும், அனைத்து அடிப்படை சுதந்திரங்களையும் மற்றும் மனித உரிமைகளையும் நிராகரித்து, எல்லா வகையான நீதி நியாயங்களையும் மீறி, ஆண்டுக் கணக்கில் சிறையில் அடைத்து வாட்டி வதைத்து வந்திருக்கிறது. 2015 ஆம் ஆண்டு 8ம் திகதி இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதோடு இந்த நிலைமை மாற்றியமைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. அரசாங்கம், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இல்லாமல் ஆக்கிவிட்டு அதற்குப் பதிலாக அரசியல் நாகரீகத்தில் முன்னேறிய நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டதொரு சட்டம் கொண்டுவரப்படும் எனக் கூறுகிறது. அவ் வகையான பயங்கரவாத தடைச்சட்டம் எந்தப் பெயரில் வந்தாலும், எந்த வகையானதாக இருக்கப் போகிறது என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது. எவ்வாறாயினும், இந்த நாட்டுக்கு எந்த வகையானதாயினும், பயங்கரவாதத் தடைச் சட்டம் அவசியமற்றதென்றே இம்மாநாடு கருதுகின்றது.

மேலும், இப்போதிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இன்னமும் நூற்றுக் கணக்கான தமிழ் இளைஞர்களை காராக்கிரக கொடுமைக்குள் தொடர்ந்தும் ஆட்படுத்தி வைத்திருப்பதனால் அது தொடர்ந்தும் அரசியல் ரீதியான ஒரு நெருக்கடியை இங்கு தக்கவைக்கவே பயன்படுகிறது. இந்த நாட்டில் இனங்களுக்கிடையில் நல்லிணக்க முயற்சிகள் முன்னேற்றம் பெறுவதற்கு இது தடையாக இருப்பதை அரசாங்கம் சரியாக உணரவில்லை என்றே தெரிகிறது. யுத்த களத்தில் கைது செய்யப்பட்ட சுமார் 12,000 தமிழ் இளைஞர்களை புனர்வாழ்வு முறை மூலம் விடுதலை செய்த அரசாங்கம் இப்போது சிறையில் இருக்கும் அதேவகையான இளைஞர்களை தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது எந்தவகையிலும் நியாயமாகத் தெரியவில்லை. எனவே, இவ்வாறாக, சிறையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்வது நாட்டு நலனுக்கு அவசியம் என்பதனால் ஜனாதிபதியும், அரசாங்கமும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

### 24. யுத்தகாலத்தில் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மானுட மற்றும் மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டமை குறித்த விசாரணை பற்றி:-

- 1971 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியினரின் வன்முறைக் கிளர்ச்சியை அடக்குவதற்காக சுமார் 10,000 இளைஞர்களை அரசு கொன்றொழித்த வேளையில் அரச படைகள் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போதும், 1989 ஆம் ஆண்டு மக்கள் விடுதலை முன்னணியினர் மீண்டும் மேற்கொண்ட பயங்கரவாத வன்முறைக்கிளர்ச்சியை அடக்குவதற்காக பல நூற்றுக்கணக்கான சமயத் தலைவர்கள் உட்பட சுமார் 60,000 இளைஞர்களை அரசு கொன்றொழித்த வேளையில் அரச படைகள் மேற்கொண்ட கொடூரமான நடவடிக்கைகளின் போதும் இங்கு சர்வதேச மானுட மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டன என்பது அனைவரும் அறிந்த உண்மை.
- 1985 ஆம் ஆண்டுக்கும் 2005 ஆம் ஆண்டு புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்துக்கான தயாரிப்பை அரசாங்கம் மேற்கொண்ட காலகட்டத்துக்கும் இடைப்பட்ட 20 ஆண்டுக் காலகட்டத்தில் புலிகள் பல்லாயிரக்கணக்கான தமிழர்களையும் முஸ்லிம்களையும் சிங்களவர்களையும் கொன்றொழித்த நிகழ்ச்சிகள், 1990 ஆம் ஆண்டு இந்திய சமாதானப் படைகள் இலங்கையை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, சுமார் 5,000 தமிழர்கள் புலிகளால் கைது செய்யப்பட்டு, சொல்லொணா வகையில் காட்டுமிராண்டித்தனமான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவங்கள் மற்றும் 1990 ஆம் ஆண்டு சுமார் ஒரு லட்சம் முஸ்லிம்களை அவர்களது சொந்த இடங்களிலிருந்து, புலிகள் பலாத்காரமாக உடுத்த உடைகளோடு வெளியேற்றிவிட்டு அவர்களது சொத்துக்கள் அனைத்தையும் சூறையாடிய நிகழ்ச்சி ஆகிய அனைத்தும் எல்லா வகையான சர்வதேச மானுட மற்றும் மனித உரிமைச் சட்டங்களை மீறியவையே. ஆயினும் இவை எதனையும் எந்தவொரு பகிரங்க விசாரணைக்கும் உட்படுத்த வேண்டுமென இலங்கை அரசாங்கமோ சர்வதேச சமூகமோ அக்கறைப்படாதது கவலை அளிப்பதாக உள்ளது.
- இலங்கையில் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையில் கடைசிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்தமீறல்கள் பாரபட்சமற்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதில் மனிதாபி மானம் உடையோர் அனைவரும் அக்கறையோடு இருப்பதை இக்கட்சி வரவேற்கிறது. ஒரு நாட்டின் சட்டபூர்வமான படைகள் எந்தக் காரணம் கொண்டும் பயங்கரவாதிகள் போல நடந்து கொள்ளக் கூடாது என்பது அவசியமாகும்.

(அடுத்த இதழில் தொடரும்)

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும் , ஆக்கங்களையும் வரவேற்கிறோம்.**

**தொடர்புகளுக்கு :-**

**இல: 294 A, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2022**

**e-mail : sdptoffice@gmail.com / /Face book : sdpt srilanka**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய வலையை தவிர்க்க ஓடிய இலங்கை

# சீனா வைத்த பொறிக்குள் விழுந்துவிட்டது

1987ம் ஆண்டு ஜுலை மாதம் இந்திய - இலங்கை சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இந்த ஆண்டு ஜுலை முடிவோடு 30 ஆண்டுகள் கடந்து விட்டது. இந்த ஆண்டு ஜுலை அதே தினத்தில் இலங்கை அரசாங்கம் அம்பாந்தோட்டைத் துறை முகத்தையும் அதை அண்டிய பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பகுதியையும் சீனாவுக்கு 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு விடுகின்ற ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. இந்த இரண்டு விடயங்களையும் இலங்கையின் புத்திஜீவிகள் பலர் ஒன்றோ டொன்று தொடர்பு படுத்தியே பார்க்கின்றனர். குறிப்பிட்ட இரண்டு ஒப்பந்தங்களையும் இலங்கையின் இனங்களுக்கிடையிலான உறவுகளோடும். அவற்றின் பரஸ்பர நலன்களோடும் தொடர்பு பட்டவை என்பதில் சந்தேகமில்லை. இந்த விடயம் பற்றிய தெளிவான புரிதலைப் பெறுவது மிகவும் அவசியமே.

### எந்த நாட்டினதும் செயற்பாட்டு நரம்புகளில் அவற்றின் தேசிய நலன்களே ஓடும்!

இந்தியாவின் தேசிய பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாடு தொடர் பான நலன்களோடு இணைந்ததாகவே இலங்கைத் தமிழர்களின் நலன்களை இந்தியா அணுகியது என்பதன் தெளிவான வெளிப்பாடே இந்திய-இலங்கை சமாதான ஒப்பந் தத்தின் உள்ளடக்கங்கள். அவற்றை அவ்வாறு புரிந்து கொள் வதில் தவறேதும் இல்லை. இந்தியாவின் தேசிய நலன்களுக்கு உட்பட்டதாகவே இலங்கைத் தமிழர்களின் நலன்களை இந்தியா தீர்மானித்தது என்கின்ற விமர்சனம் சாராம்சத்தில் இங்கு முதலில் கூறப்பட்டதையே வேறுவகையாக வலியுறுத்துகிறது. இந்திய அரசு தனது தேசத்தின் தேசிய நலன்களை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு இலங்கைத் தமிழர்களின் விவகாரத்தை எக்காலத்தும் அணுகமாட்டாது என்பது விவாதத்துக்கு இடமற்ற கூற்றாகும். அதேவேளை. இந்தியாவின் நலன்களுக்கு ஒவ்வாத வகையில் இலங்கையில் எந்த அரசியல் - இராணுவ விவகாரமும் இடம் பெறுவதை இந்தியா விரும்பாது என்பதுவும் புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும். இந்தியாவின் தேசிய நலன் களுக்கு பாதகமான எந்தவொரு நிகழ்வு இலங்கையில் இடம் பெற்றாலுமோ அல்லது இலங்கையின் எந்தப் பகுதியினராலும் உலகின் எந்தப் பாகத்திலும் மேற்கொள்ளப்பட்டாலுமோ இந்தியா அதற்கான மாற்று ஏற்பாடுகளுக்கு முயற்சிக்கும் என்பதுவும் தெளிவான ஒன்றே.

### சீனப் பொறிக்குள் இலங்கை! கண்துடைப்பு எதிர்ப்புகள்!

அம்பாந்தோட்டையில் சீனா குடியிருக்கப் போவது இராணுவத் தளம் அமைப்பதற்காக அல்ல, வெறுமனே பொருளாதார செயற் பாடுகளுக்காகவே என சீனா எவ்வளவுதான் கூறினாலும் சீனாவின் அம்பாந்தோட்டை ஒப்பந்தமானது சீனாவின் உலகளா விய இராணுவ பொருளாதார வளையங்களை உருவாக்கும் பெருந்திட்டத்தின் ஒரு பகுதியே என்பது வெளிப்படை.

இந்த ஒப்பந்தத்தை மஹிந்த ராஜபக்ஷ அணியினரும். சிங்கள இனவாத புத்திஜீவிகளும். ஜே.வி.பி யினரும் ஆங்காங்கே எதிர்த்து அறிக்கைப் பிரச்சாரம் செய்கின்றனர். இலங்கையின் துறைமுகங்களையும். பொருளாதார வளம் மிக்க நிலப்பகுதி களையும் அந்நிய நாடுகளுக்கு அடகு வைக்கும் நடவடிக்கை களின் ஆரம்பமே சீனாவுக்கு அம்பாந்தோட்டை துறைமுகத்தை வழங்கும் குத்தகை ஒப்பந்தம் என விமர்சிக்கின்றனர்.

### தாராள முதலாளித்துவ கொள்கையில் தேச வளங்கள் அந்நிய கைகளில்!

இலங்கை அரசு எதிர்நோக்குகின்ற அந்நிய செலாவணி பற்றாக் குறை நெருக்கடியை சமாளிப்பதற்கும். தாராளவாத பொருளாதார அபிவிருத்தியை விரிவடையச் செய்வதற்கும் வெளிநாட்டு மூல தனங்களை வரவழைப்பதே தற்போது அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தின் பொருளாதார மூல உபாயங்களில் பிரதானமான ஒன்றாக உள்ளது. வெளிநாடுகளில் இருந்து ஏற்கனவே பெறப் பட்ட கடன்கள் மேலும் பெற முடியாத அளவுக்கு இலங்கைப் பொருளாதார இயலுமையின் உச்ச நிலையைத் தொட்டு விட்டது. எனவே. இப்போதுள்ள அரசாங்கம் வெளிநாட்டு மூலதனங்களை கவருவதற்கு எதனையாயினும் செய்வது என்ற அணுகு முறையையே கடைப்பிடிக்கிறது. அந்த வகையில் பொருளாதார வல்லமை மிக்க நாடுகள் சுதந்திர பொருளாதார வலயங்களை இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் அமைப்பதற்கு அனு மதிப்பதை இந்த அரசாங்கம் தனது கொள்கையாக கடைப்பிடிக் கின்றமை புரிந்து கொள்ளப்பட வேண்டிய ஒன்றே.

அரச தலைவராக ஜனாதிபதி மைத்திரி இருப்பினும் ரணில் விக்கிரமசிங்காவே தற்போதைய அரசாங்கத்தின் தலைவர். ஐக்கிய தேசியக் கட்சியின் முடிவுகளே அரச தீர்மானங்களை பிர தானமாக நிர்ணயிக்கின்றன. ராஜபக்ஷாக்களின் அரசாங்க கால கட்டத்தில் அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி மற்றும் மத்தள சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றிற்காக சீனாவிட மிருந்து பெற்ற பெருங்கடனை உரியபடி திருப்பிக் கொடுக்கும் வல்லமை இந்த அரசாங்கத்திடம் இல்லை. பொருளாதார ரீதியில் பொருத்தமற்ற அந்த திட்டங்களுக்காக பெற்ற கடனைத் திருப்பிக் கட்டுவதற்கு உதவ எந்த நாடும் தயாராக இல்லை. மேலைத் தேச முதலாளித்துவ நாடுகளின் நண்பனான ரணில் விக்கிர மசிங்காவினால் கூட சீனப் பொறிக்குள் இருந்து இலங்கையை வெளியேற்ற முடியாத அளவுக்கு சீனா அம்பாந்தோட்டையின் ஊடாக இலங்கையை தப்பியெழ முடியா வகையில் தனது பொறிக்குள் வீழ்த்தி விட்டது என்பது தெளிவாக வெளிப்பட்டு விட்டது.

சீனாவுடனான இந்த குத்தகை ஒப்பந்தம் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் ஆங்காங்கே காட்டப் படுவது உண்மையேயாயினும் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்பு இந்திய-இலங்கை சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட நாட்களில் தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு இயக்கங் களோடு ஒப்பிடுவோமாயின் இப்போது வெறும் பெயரளவிலேயே நடைபெறுகின்றன எனலாம். அம்பாந்தோட்டையை மையமா கக் கொண்டு சீனா பெரும் முதலீடுகளை மேற்கொள்வதற்கான அனைத்தையும் முதலில் செய்தவர்கள் ராஜபக்ஷாக்களே! இப் போது இந்த அரசாங்கம் சீனாவுடன் செய்துள்ள ஒப்பந்தத்துக்கு எதிரான ராஜபக்ஷாக்களின் கருத்துக்கள் வெறுமனே தமது உள்நாட்டு அரசியலுக்கான கண்துடைப்பே. ராஜபக்ஷாக்கள் இப்போதும் பதவியில் இருந்திருந்தால் இதை விடவும் மோச மான நிலைமைகளே ஏற்பட்டிருக்கும். அம்பாந்தோட்டையில் சீனாவின் முதலீட்டுக்கு தடை ஏற்பட்டால் அந்த முதலீடுகளை பொலனறுவைக்கு வரவேற்க தயாராக இருப்பதாக ஜனாதிபதி மைத்திரி அவர்கள் ஒருமுறை பகிரங்கமாக அறிவித்தமை இங்கு நினைவு கூரப்பட வேண்டிய ஒன்றே!



சர்வோதயன்

### தமிழர்களைக் கனவிற் கண்டு அஞ்சி தனது நெஞ்சில் கத்தியேற்றும் சிங்களம்

சீனாவுடனான இந்த புதிய ஒப்பந்தத்தைக் காரணம் காட்டி இந்தியா திருகோணமலை துறைமுகத்தையும் அதை அண்டி அமைந்துள்ள எண்ணெய்க் குதங்களையும் மற்றும் நிலப்பரப்பு களையும் நீண்டகால குத்தகைக்கு எடுத்து விடுமோ என்ற அச்சம்தான் சிங்கள இனவாத சக்திகள் மத்தியில் தலைதூக்கி நிற்கின்றது. அதை தடுக்கும் நோக்குடனேயே சீனாவுடனான ஒப்பந்தத்தை தென்னிலங்கை சிங்கள தேசியவாத சக்திகள் பெயரளவிலாயினும் எதிர்க்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

இலங்கை அந்நிய நாடுகளுக்கு மீளமுடியாத கடனாளியாக ஆவது பற்றியோ அல்லது இலங்கையின் பல்வேறு வளம் மிக்க பகுதிகளை சுதந்திர பொருளாதார வலயங்கள் என்ற வடிவில் அந்நிய நாடுகள் தமது காலனித்தீவுகளை இலங்கைக்குள் பர வலாக அமைப்பது பற்றியோ இலங்கையின் எந்த இனத்தவர் மத்தியிலும் பெரும்பான்மையானவர்களிடம் கவலையேதும் இல்லை. சர்வதேசரீதியாக இராணுவ-பொருளாதார வல்லமை கொண்ட நாடுகள் எவற்றினதும் இராணுவ மற்றும் கட்டுப் பாடற்ற பொருளாதார தளங்களை இலங்கையில் அனுமதிக்கக் கூடாது என்பதில் தென்னிலங்கையினதோ வட இலங்கையி னதோ ஆதிக்க சக்திகள் அக்கறையாக இருக்கிறார்கள் என்றில்லை.

சீனா இலங்கையில் தளங்கள் பெறுவது தொடர்பான எதிர்ப் புணர்வு தென்னிலங்கையின் மிகவும் மென்மையானதாகவே உள்ளது. சீனாவின் செல்வாக்கு இலங்கையில் விரிவடைவது தொடர்பாக இலங்கையின் முதலாளித்துவ சக்திகள் மத்தியிலும் அச்சமெதுவுமில்லை. இன்றைய சீனாவின் சந்தைப் பொருளா தார அமைப்பும். சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான புவியியல் இடைவெளித் தூரமும். மேலைத் தேச முதலாளித்துவ நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையேயான பொருளாதார மற்றும் இராணுவ போட்டிகளும் இலங்கைக்கு சாதகமான அம்சங்களா கவே தென்னிலங்கை சக்திகளால் பார்க்கப்படுகின்றது. அதே வேளை சீனா இலங்கையில் அகலமாக கால் பதிப்பது இந்தியா வின் செல்வாக்கு இலங்கையில் பரவுவதை தடுக்கும் என்பதே சிங்கள தேசியவாத சக்திகளின் கருதுகோள்.

இந்தியா இனி எக்காலத்தும் எந்த வடிவிலும் இலங்கைத் தமிழர் களுக்கு ஆதரவாக இருக்காது என்ற உறுதியான எண்ணம் தென்னிலங்கை சக்திகள் மத்தியில் ஏற்படுமானால் இந்தியா வின் கால்கள் இலங்கையில் விரிவடைவதை எதிர்க்கமாட்டார் கள். இந்தியாவுக்கு கட்டை போடுவதற்கு சீனாவிற்கு தளங் களை தாராளமாக விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற எண்ண மும் ஏற்படாது. ஆனால். அவ்வாறான நிலைமைகளுக்கு சாத் தியமில்லை. புவியியல் ரீதியல் இலங்கைக்கு அண்மித்த வடக்கே மற்றும் வடமேற்கே இந்திய நிலப்பரப்பில் தமிழ்நாடு அமைந்திருக்கும் நிலையில் இலங்கையின் இன முரண்பாடே இலங்கையில் இந்திய மற்றும் சீன பொருளாதார மற்றும் இராணுவ தளங்களின் விரிவாக்கத்தை நிர்ணயிக்கும் பிரதான காரணிகளில் ஒன்றாக உள்ளதெனலாம்.

### அவலை நினைத்து இடித்து - இந்தியா தனது உரலையே உடைத்து விட்டதா?

இந்திய இலங்கை சமாதான ஒப்பந்தம் சாதித்த ஒரே விடயம் இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்பில் மாகாண சபை களை அறிமுகப்படுத்தியதுதான். இந்த மாகாண சபைகள் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் வகையாக உள்ளதா? இல்லையா? என்ற கேள்வி ஒரு புறமிருக்க. இருபதாம் நூற்றாண்டின் அரசியல் வரலாற்றில் இந்த மாகாண சபைகளை மட்டுமே தமிழர்களால் பெற முடிந்தது.

இந்திய- இலங்கை சமாதான ஒப்பந்தம் இந்தியாவின் தேசிய நலன்கள் தொடர்பான விடயங்களை உள்ளடக்கியிருப்பினும் அந்த ஒப்பந்தின் மூலமாக இந்தியா அதனது தேசிய பாதுகாப்பு தொடர்பாக அது எதிர்பார்த்தவற்றை கடந்த முப்பது ஆண்டு களில் சாதித்துக் கொள்ள முடிந்ததா என்ற பெரும் கேள்வி எழுகிறது. சீனாவுக்கு அம்பாந்தோட்டையையும் அதனை அண்டிய நிலப்பரப்பையும் 99 வருட குத்தகைக்கு வழங்கியதன் மூலம் இலங்கை அரசு இந்திய-இலங்கை சமாதான ஒப்பந் தத்தை அர்த்தமற்றதாக்கியுள்ளது. இந்த விடயத்தில் இந்தியா எதுவும் செய்ய முடியா நிலைக்கு ஆளாகியுள்ளமை தெளிவாக உள்ளது.

### இந்தியா கலக்கிய குட்டையில் சீனா கொத்தாக மீன்களை அள்ளிக் கொண்டது!

சீனா இலங்கைக்குள் அகலக் கால் வைப்பதற்கு இலங்கையின் பெரும்பான்மை சக்திகள் இடமளித்தமைக்குக் காரணம் இந்தியா தமிழர்களுக்குச் சார்பான நிலைப்பாடுகளை கடைப்பிடித்த மையே என இந்திய அரசு இப்போது உணர்வது தெரிகிறது. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடந்த மே மாதம் இலங் கைக்கு விஜயம் செய்தபோது வடக்கு கிழக்கை முற்றாக புறக் கணித்தமை அதனையே காட்டுகிறது. தமிழர்களுக்கு சாதக மான நிலைப்பாட்டை எடுத்த போதிலும் தமிழர்களிடமிருந்து சாதகமான எதனையும் பெற முடியாது போனது மட்டுமல்ல இந்திய நல்லுறவுகளிலிருந்து சிங்களவர்களை அந்நியப்படுத்து வதாக அமைந்து விட்டது என தற்போதைய இந்திய அரசு கருது வதாகவே கணிக்க வேண்டியுள்ளது. இது இந்திய அரசின் காலம் கடந்த சிந்தனையோ என்ற கேள்வியே தொக்கி நிற்கிறது.

இலங்கையில் இன முரண்பாடு உள்நாட்டு யுத்தமாக தலை தூக்கி நின்ற 1980களில் மேலைத் தேச முதலாளித்துவ நாடுகள் இலங்கையில் தளங்கள் அமைப்பதை தென்னிலங்கை சக்திகள் எதிர்க்கவில்லை காரணம் அக்காலகட்டத்தில் சர்வதேச உறவு களில் மேலைத் தேச முதலாளித்துவ நாடுகளும் இந்தியாவும் எதிர் நிலையில் நின்றன. இலங்கைத் தமிழர்களின் போராட்டத் துக்கு இந்தியா துணையாக நின்றதால் மேலைத் தேச முதலா ளித்துவ நாடுகள் இலங்கை அரசுக்கு சார்பாக செயற்பட்டன. அன்றைய காலகட்டத்தில் மேலைத்தேச முதலாளித்துவ நாடுகள் தென்னிலங்கையின் நட்பு சக்திகளாக – உதவும் கரங்களாக பார்க்கப்பட்டன.

ஆனால். 1990 களின் ஆரம்பத்தில் சோவியத் யூனியன் கலைந்து போனது. அதே காலகட்டத்தில் இந்தியாவின் பொருளா தாரம் தாராளமயமாக்கப்பட்டு சர்வதேச மூலதனங்களுக்கும்

( தொடர்ச்சி 6 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபையின் அதிகாரங்கள் தொடர்பில்

கேள்வி :-

**பல்வேறு அச்சுறுத்தல்கள், சவால்களுக்கு மத்தியில், குறுகிய காலம் மட்டுமே நீடித்திருந்த இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக இருந்த நீங்கள் அந்த மாகாண சபைக்கும், தற்போதைய மாகாண சபைக்கும் இடையே அரசியல் மற்றும் நிர்வாகரீதியாக காணுகின்ற வேறுபாடுகள் எவை?**

பதில்:-

உங்களுடைய கேள்வியிலேயே அந்த மாகாண சபை உட்பட்டிருந்த நெருக்கடியான சூழலை குறிப்பிட்டிருக்கிறீர்கள். அன்றைக்கு நவீன ஆயுதங்களுடன் மோதிய சண்டைகள், எதிர்பார்த்திராத இடங்களிலெல்லாம் குண்டு வெடிப்புகளால் ஏற்பட்ட அவலங்கள், நாள் தோறும் படுகொலைகள் என இருந்த நிலைமை இன்றைக்கு இல்லை. அன்றைக்கு அந்த மோசமான நிலைமைகளுக்கு ஆதரவாக இருந்து பதவி, பண இலாபங்களை அனுபவித்தவர்களே இன்று அமைதியான சூழ்நிலையில் எல்லா வளங்களுடனும், உறவுகளுடனும், மக்களின் அமோக ஆதரவோடும் மாகாண சபையின் பதவிகளில் அமர்ந்திருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களாக இருந்தவர்களும், அதன் அமைச்சரவையில் இருந்தவர்களும், நிர்வாகத்தில் இருந்த அரச உத்தியோகத்தர்களும் ஒரே முகமாக செயற்பட்டு மாகாண சபையை காத்திரமானதாகவும், ஆக்கபூர்வமானதாகவும், மக்களுக்கு பயனுடையதாகவும் இயங்கும் நிலையை உருவாக்கி, யுத்தத்தால் அழிந்தவற்றை மீளக் கட்டியெழுப்பும் வகையாகவும், இழந்தவற்றை மீளப்பெறும் இலக்குகளுடனும் செயற்பட்டனர். அதற்காக உயிரைப் பணயம் வைத்து அர்ப்பணிப்போடும், முழுமனதுடனான ஈடுபாட்டோடும், தியாக உணர்வுகளோடும் செயற்பட்டார்கள். இன்றைக்கு "அதிகாரம் தரப்படவில்லை" என்கிறார்கள். ஆனால், இங்கு அரசியல் யாப்பின் எந்தவொரு விதி தொடர்பாகவும் வேறுபட்ட – முரண்பாடான புரிதல்கள் ஏற்படுமிடத்து அதற்கான தீர்க்கமான விளக்கம் என்னவென தீர்ப்பளிப்பதற்கான அதிகாரம் உச்ச நீதிமன்றத்துக்கு மட்டுமே உண்டு. ஆனால் மாகாண சபைக்கான நிறைவேற்றதிகாரம் தொடர்பான விளக்கம் எந்தக் கட்டத்திலும், யாராலும் உச்ச நீதிமன்றத்திடம் கோரப்படவில்லை. ஆனால் சட்டமுறைமைகளைக் கடந்து சண்டித்தன அதிகாரம்



28 ஆண்டுகளுக்கு முன்னர் இணைந்த வடக்கு-கிழக்கின் முதலமைச்சராக அ. வரதராஜப்பெருமாள்

உள்ளவர்கள் தங்கள்பாட்டிற்கு இங்கு மாகாண சபைகளுக்கான நிறைவேற்று அதிகாரம் யாருக்கு உரியது என்பதைத் தீர்மானிக்கிறார்கள். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக நீதிதேவதையின் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவரே இப்போது வடக்கு மாகாண முதலமைச்சராக இருக்கிறார். இருந்தும் மாகாண அமைச்சர்களின் நிறைவேற்றதிகாரம் தொடர்பாக இவர் கூட எந்தவொரு சாதகமான நிலைப்பாடுகளைக் கொண்ட பௌத்த குருமார்கள் பரவலாக பெருந்தொகையாகவே உள்ளனர். அவ்வாறானவர்களை அணுகி, அவர்களின் ஆதரவுக் குரல்களை திரட்டுவது இங்குள்ள நிலைமையில் மிகவும் அவசியமாகும்.

தமிழ் மக்களிடம் வாக்குகளை பெற்று பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் இருப்பவர்களே தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை எவ்வாறாயினும் நிறைவேற்ற வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் எவ்வளவு சங்கடங்கள் உள்ளன என்பதை சாமானியன் கூடக் கூறுவான். அதற்காகவல்ல இவர்கள் பாராளுமன்றத்துக்கும் மாகாண சபைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். தமிழர்கள் தங்களது பிரதிநிதிகளாக தமது வாக்குகளால் யாரைத் தெரிவு செய்திருக்கிறார்களோ அவர்களிடமே அரசியற் தீர்வையும் எப்படியாயினும் சாத்தியமாக்கும்படி கோர வேண்டும். ஆற்றிலே போட்டு விட்டு குளத்திலே தேடக் கூடாது.

கேள்வி :

**மாகாண சபை போன்ற அதிகார அலகொன்றையே தமிழர்களால் நிர்வகிக்க முடியாதென்ற தோற்றப்பாட்டினை தற்போதைய வடமாகாண சபை தெற்கில் ஏற்படுத்தி விட்டதா?**

பதில்:-

நாங்கள் தலைமையேற்றிருந்த வடக்கு கிழக்கு மாகாண சபை பற்றி பேசுவோர் இன்று வரையும் கூட அவ்வாறு சொல்வதில்லையே! எனவே, முன்னாள் நீதியரசர் மற்றும் சட்ட மேதை விக்னேஸ்வரனின் தலைமையிலான வடக்கு மாகாண சபையின் இயலாமை – வல்லமையின்மை என்பது ஒட்டு மொத்த தமிழர்கள் மத்தியில் நிர்வாக ஆற்றலின்மை– திறமையின்மை என்பதன் பிரதிபலிப்பாகாது. ஒரு காலகட்டத்தில் இலங்கை அரசின் அமைச்சுக்களில் இருந்த சிறந்த நிர்வாகிகளில் தமிழர்களே பெருந்தொகையினராக இருந்தனர் என்பது மறுக்க முடியாத வரலாறு. இன்றைக்கும் சிங்கள அரச அதிகாரங்களின் கீழ் செயற்படும் தமிழ் அரசாங்க நிர்வாகிகள் மிகவும் திறமை வாய்ந்தவர்களாகவே உள்ளனர். எனவே, இது ஒட்டு மொத்த தமிழ்ச் சமுதாயத்தில் நிலவும் உள்ளார்ந்த ஆற்றல் பற்றிய கேள்வி அல்ல. மாறாக பெரும்பான்மையான தமிழர்களால் அங்கீகரிக்கப்படும் –

**திருமதி வாசுகி சிவகுமார் அவர்கள் இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் திரு. அ. வரதராஜபெருமாள் அவர்களைப் பேட்டி கண்டபோது எழுப்பிய கேள்விகளுக்கு அளிக்கப்பட்ட பதில்கள். 23 ஜூலை 2017 தினகரன் வாரமஞ்சரியில் வெளியிடப்பட்டது நன்றியோடு அதிலிருந்து ...**

கோடிக்கணக்கில் ஊழல்கள் இடம்பெற்றிருக்கிறது. பெருந்தொகையில் அதிகார துஷ்பிரயோகங்கள் நடந்திருக்கின்றன.

கேள்வி :-

**இந்தியா தனது மாநிலங்களுக்கான அதிகாரங்களை ஒத்ததாகவே இலங்கையின் மாகாண சபை முறைமையையும் உருவாக்கிய போதிலும், சிற்றூழியர் ஒருவரைக் கூட நியமிக்கும் அதிகாரம் தம்மிடம் இல்லையென்கின்றனரே வட மாகாண அமைச்சர்கள்?**

பதில்:-

நிறைவேற்றதிகாரம் தொடர்பான அரசியல் யாப்பு விதிகள் எவ்வாறு இந்திய அரசியல் யாப்பில் உள்ளதோ அவ்வாறே இங்குள்ள மாகாண சபைகள் தொடர்பான இலங்கையின் அரசியல் யாப்பிலும் உள்ளது. ஆனால் அதே வாக்கியங்கள் இந்தியாவில் முதலமைச்சருக்கும் அமைச்சர்களுக்கும் நடைமுறை நிறைவேற்றதிகாரங்களை வழங்கும் பொழுது இலங்கையில் மட்டும் அது எப்படி தலைகீழாக நடக்கிறது என இங்குள்ள சட்ட நிபுணர்கள்தான் பதிலளிக்க வேண்டும். என்னைப் பொறுத்த வரையில் இது அரசியல் யாப்பின் குறைபாடல்ல. மாறாக, இங்குள்ள அரசியலின் குறைபாடு. நிறைவேற்றதிகாரம் தொடர்பாக இந்தியாவில் உள்ளதையே இலங்கைத் தமிழருக்கும் இந்தியா பெற்றுக் கொடுத்தது. ஆனால் இங்குள்ளவர்கள் "நந்தவனத்தில் ஓர் ஆண்டி, அவன் நாலாறு மாதமாய் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி, அதை கூத்தாடி கூத்தாடி போட்டுடைத்தாண்டி" என ஆக்கிவிட்டு இந்தியாவிடம் குற்றங்களைத் தேடுவதில் அர்த்தமில்லை.

கேள்வியையும் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுப்பவில்லை. அது ஏன் என்று எவரும் இதுவரை கேட்கவுமில்லை.

கேள்வி :-

**புதிய அரசியலமைப்புக்கான தேவையோ, அரசியல் யாப்பு திருத்தத்துக்கான தேவையோ இல்லையென பௌத்த மகா சங்கங்கள் அண்மையில் கூட்டாக அறிவித்துள்ளன. இந்நிலையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கமொன்றின் மூலமாக தமிழர்களின் அபிலாசைஷகளுக்கான தீர்வென்பது எந்தளவுக்குச் சாத்தியமாகும்?**

பதில்:-

இலங்கையின் அரசியலில் மதம், சாதி, மொழி என்பன தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் மட்டுமல்ல, இலங்கையின் அனைத்துப் பகுதிகளிலும் அனைத்து இன மக்கள் மத்தியிலும் செல்வாக்கு செலுத்துகின்றமையே யதார்த்தம். தமிழர்கள் மத்தியிலும் அவ்வாறே!

பௌத்த பிக்குகள் அனைவரும் தமிழர்களுக்கான அரசியற் தீர்வு தொடர்பாக ஒரு முகமாக ஒரே அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார்கள் என்றில்லை. மாகாண சபைகளுக்கான அதிகாரப் பகிர்வு மற்றும் தமிழர்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பாக

தேர்தெடுக்கப்படும் அரசியற் தலைமை பற்றியதே. இவர்கள் பொது மக்களின் சொத்துக்களை – பொது மக்களின் அபிவிருத்திக்கான பணங்களை ஊழல் மோசடிகள் செய்வதிலும், தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்காக அதிகாரங்களைத் துஷ்பிரயோகங்கள் செய்வதிலும் வல்லவர்களாக உள்ளனர் என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். எனவே இந்த போலித் தமிழ் தேச வாதிகள் வல்லவர்கள் அல்லவென்றில்லை. எதில் வல்லவர்கள் என்பதுதான் பிரச்சினை.

புதிய சிந்தனைகளோடு உண்மை மற்றும் நேர்மை ஆகியவற்றை அடிப்படையாக்க் கொண்டு மாற்றங்களை தமிழர்கள் ஆற்றினால் ஆற்றலுள்ள மாகாண சபையை அவர்கள் காணலாம். ஆனால் தமிழர்கள் மத்தியிலுள்ள பெரும்பாலான சமூகப் பிரமுகர்களும் புத்திஜீவிகளும், ஒரு மாகாண சபையைக் கூட உண்மையாகவும் நேர்மையாகவும் நிர்வகிக்க முடியாதவர்களை ஆதரிக்கும் வரை வடக்கு மாகாண சபையும் அனைத்து உள்ளூராட்சி அமைப்புகளும் தொடர்ந்தும் இப்படித்தான் ஆற்றலற்றவைகளாக - ஊழல் நிறைந்தவைகளாகவே இருக்கும்.

தென்னிலங்கை பேரினவாத சக்திகளுக்கும் இதனால் மகிழ்ச்சிதானே! யாழ்ப்பாணம் வாழ் தமிழர்களிற் பெரும்பான்மையினரும் மேலைத் தேச நாடுகளிலுள்ள தமிழர்களில் கணிசமானவர்களும் சபாஷ்! சிங்களவர்களுக்குச் சவாலான சரியான போட்டி! என வடக்கு மாகாண சபை பற்றி பெருமைப்படும் போது யார்தான் முன்னேற்றங்களை எதிர்பார்க்க முடியும்? அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி

# விக்கினேஸ்வரன் ஏன் உச்ச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் நீதியரசர், வடக்கின் முதலமைச்சர்

என்பது பழையது. ஆனால் இப்போது மக்களின் தரத்துக்கு ஏற்பவே அவர்களுக்கான அரசியற் தலைமையும் அமையும்!

கேள்வி :-

**தமிழ் மக்களுக்கான தீர்வுகள் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் தெற்கில் பலத்த எதிர்ப்பலைகள் தோன்றும் என்பது தெரிந்திருந்தும், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் நியாயத் தன்மைகள் குறித்து பெரும்பான்மை மக்களிடம் புரிதல்களை ஏற்படுத்தும் முயற்சிகளை தமிழ்த் தலைமைகள் ஏன் செய்யவில்லை?**

இருந்தவர்கள்) வடக்கு கிழக்கு இணைப்பு பழைய அதே வகையாக சாதிக்க முடியாவிட்டாலும் இங்குள்ள அனைத்து இன மக்களும் நன்மையடையும் விதமாக வடக்கு கிழக்கு இணைப்பை புதிய விதமாக எவ்வாறு சாத்தியமாக்கலாம் என்பது பற்றி தெளிவாக எழுத்து மூலம் தெரிவித்திருக்கிறார்கள் - தொடர்ந்து பேசி வருகிறார்கள்.

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னர் பிடிவாதமாக வடக்கு கிழக்கு இணைப்பு இல்லாத அரசியற் தீர்வை தாங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்க

அவர்கள் காலத்தில் எந்தவொரு அரசியற் தீர்வும் சாத்தியமாகாமற் போனது. இன்றைய நிலைமை அப்படியல்ல.. எந்த மாகாண சபையை புலிகள் எதிர்த்தார்களோ அதே மாகாண சபையில் உறுப்பினர் பதவிக்கும் அமைச்சர் பதவிக்கும் தானே அதே புலிகளால் தலைவர்களாக்கப்பட்டவர்கள் இன்று ஆலாய்ப் பறந்து அடிபடுகிறார்கள்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தோற்றவர்கள் வென்றிருந்தால் அல்லது குறைந்தபட்சம் கொழும்பு ரகசிய

**மக்களின் அடிப்படை உரிமைகள், இனங்களுக்கிடையில் உண்மையான சமத்துவத்தின் அடிப்படையிலான நல்லிணக்கம், மாநில சுயாட்சி அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபைகள், முற்போக்கான பொருளாதார முன்னேற்றம், நீதியான சமூகக் கட்டமைப்பு, காத்திரமான சட்டத்தின் ஆட்சி, உண்மையான மக்களாட்சி அரசமைப்பு ஆகியவற்றிற்காக தம்மை அர்ப்பணித்து செயற்படும் தலைமையே இன்றைய தேவை.**

பதில்:-

தமிழ் இயக்கங்கள் ஆயுதம் தாங்கிப் போராடிய காலகட்டத்தில் குறிப்பாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி மற்றும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகிய இரண்டும் பரந்துபட்ட சிங்கள மக்கள் மத்தியில் தமிழ் மக்களின் போராட்ட நியாயங்கள் பற்றிய தெளிவை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டன.

அதற்காக இவ்விரு இயக்கங்களும் சிங்கள மக்களின் மத்தியில் இருந்த முற்போக்கு ஜனநாயக சக்திகளுடனும் விரிவான உறவுகளைக் கொண்டிருந்தன.

என்றைக்கு புலிகள் தமிழர்களின் நியாயமான போராட்டத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்களோ, அன்றிலிருந்து சிங்கள மக்களை ஒட்டு மொத்தமாக தமிழர்களுக்கு எதிராக நிறுத்தும் வேலைகளை புலிகள் சாதித்தனர்.

புலிகளின் ஆசீர்வாதத்துடன் தமிழர் தலைவர்களாக ஆக்கப்பட்டவர்களே இப்போது பாராளுமன்ற மற்றும் மாகாண சபை தேர்தல் அரசியலில் ஆதிக்கம் வகிப்பவர்களாக உள்ளனர். இவர்களின் வாக்கு வேட்டை அரசியல் குறுகிய தீவிர இன உணர்ச்சி வாத அரசியலை அடிப்படையாகக் கொண்டது. அதுவே அவர்களுக்கு தேர்தல் வெற்றிகளை சுலபமாக பெற்றுக் கொடுக்கிறது. இவர்களுக்கு தமிழ் மக்களுக்கான அரசியற் தீர்வை விட அவர்களது தேர்தல் வெற்றிகளே பிரதானமானவை.

சிங்கள பேரினவாதம் தனது செல்வாக்கை சிங்கள மக்கள் மத்தியில் தக்க வைப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் தமிழர்கள் மத்தியில் தீவிர தமிழ்த் தேசவாதம் தலைதூக்கி நிற்பது அவசியமாகும். அதேபோல சிங்களப் பேரினவாதம் தலைதூக்கி படமெடுத்து ஆடினால்தான் தமிழர்கள் மத்தியில் தீவிர தமிழ்த் தேசவாதம் செல்வாக்குடையதாக நிலைக்க முடியும். நியாயமான அரசியற் தீர்வு என்பது குறிப்பிட்ட இரண்டு இன உணர்ச்சி வாதத்தினதும் நன்மைகளுக்கு எந்த வகையிலும் பொருத்தமானவைகள் அல்ல. இப்படியிருக்கையில், தீவிர தமிழ்த் தேசவாதத்தை போர்த்தி செயற்படுபவர்கள் எவ்வாறு சிங்கள மக்கள் மத்தியில் தமிழர்களின் நியாயங்களை முன்னெடுத்து செல்வார்கள் என எதிர்பார்க்க முடியும்?

மாட்டோம் எனக் கூறி வாக்கு வேட்டை அரசியலை செய்தவர்கள் இப்போது புதிய அரசாங்கத்தின் மூலமாக வடக்கு கிழக்கு இணைப்பு அற்ற ஒரு அரசியற் தீர்வை பெறுவதற்கு முயற்சித்து வருவதாக வெளிப்படையாக - உறுதியாகவே தெரிவிக்கிறார்கள்.

எனவே, வடக்கு கிழக்கு இணைப்பு என்பது தமிழர்கள் மத்தியில் முன்னர் இருந்தது போல இறுக்கமான சிந்தனையாக இல்லையென்பது தெளிவாகிறது. எனவே



வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரன்

வடக்கு கிழக்கு இணைப்பற்ற வகையிலாயினும் நியாயமானதோர் அளவுக்கு அதிகாரப் பகிர்வு கொண்ட அரசியற் தீர்வுக்கான சிந்தனை தமிழர்கள் மத்தியில் ஏற்கனவே அங்கீகாரம் பெறத் தொடங்கிவிட்டதாகவே தெரிகிறது.

கேள்வி :-

**தமிழ் மக்களுக்கான சாத்தியமான தீர்வைப் பற்றிப் பேசுவோரை துரோகிகளாக, அல்லது அவ்வாறானவர்களின் கடந்தகால அரசியற் பின்னணி ஆராயப்பட்டு ஓரம் கட்டப்படுவதுமான சூழலே நிலவுவதால் சாத்தியமான தீர்வு என்பது தமிழர்களுக்கு எட்டாக்கனியான ஒன்றாகவே இருக்குமா?**

பதில்:-

பதவிப் போட்டிகளெனும் போது ஒரு கட்சியினர் மற்றொரு கட்சியினரை எவ்வாறாயினும் ஓரம் கட்டிவிட முயற்சிப்பது தேர்தல் அரசியலில் சகஜமே. ஒரு காலகட்டத்தில் துரோகிகள் என அழைக்கப்பட்டோரோடு அதே ஆட்கள் இன்னொரு கட்டத்தில் கூட்டுச் சேர்வதுவும் இங்கு நடைபெற்றுள்ளன. இங்கு தமிழர் அரசியலில் தியாகிகளான துரோகிகளையும், துரோகிகளான தியாகிகளையும் நிறையவே பார்க்க முடிகிறது.

ஆயுத வல்லமை கொண்டிருந்த புலிகள் பாசிச தமிழீழத்துக்கான கனவோடு வெறி கொண்டு செயற்பட்டதால்

# நீதிமன்றத்தை நாடவில்லை ?

கேள்வி :-

**தமிழ் மக்களின் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த அரசியற் தீர்வு இப்போதைக்கு சாத்தியமில்லை எனும் நிலையில் சாத்தியமான தீர்வை நோக்கி ஏன் தமிழ்த் தலைவர்கள் ஆராயவில்லை?**

பதில் :-

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள அறிவார்ந்தோரிற் கணிசமான தொகையினரும், முற்போக்கான சிந்தனைகள் கொண்ட அரசியற் சக்திகளும் ஏற்கனவே வடக்கு கிழக்கு இணைப்பின் சாத்தியமின்மை பற்றி விரிவாகவே - தெளிவாகவே உள்ளனர். தமிழர் சமூக ஜனநாயகக் கட்சினர் (முன்னர் பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என

உறவுகள், வெளிநாடுகளுடனான ராஜரீக கொடுக்கல் வாங்கல்களில் சம்பந்தர் அவர்களை தொடர்ந்து கூட்டாக பங்காளிகளாகக் கொண்டு திரிந்திருந்தால் அவர்களிடமிருந்து எப்போதோ சமஷ்டி, சுயநிர்ணயம் எல்லாம் காணாமற் போயிருக்கும். அதேபோலவே சுமந்திரனுக்கு கொடுத்த முக்கியத்துவத்தை சம்பந்தர் விக்கினேஸ்வரனுக்கு அளித்திருந்தால் தமிழ் மக்கள் பேரவை என்பது தோன்றியிருக்கவே மாட்டாது.

இன்று புலிகளும் இல்லை. சாத்தியமான அரசியற் தீர்வை சட்டமாக்க வேண்டியது பாராளுமன்றமே. அதனை நேர்மையோடு நிறைவேற்ற வேண்டியது கொழும்பு மைய அரசாங்கமே. இந்த இரண்டும் நடக்குமாயின் நடைமுறைக்கு உகந்த அரசியற் தீர்வு சாத்தியமே. இன்று அதிதீவிர தமிழ்த் தேச வாதம் பேசுபவர்களெல்லாம் பதவிகளுக்கும் பணத்துக்கும் வீர வசனங்களுடன் நாடகம் போடும் போலிகளே. இவர்கள் தியாகிகள், துரோகிகள் எனும் அழுகிப் போன வார்த்தைகளில் தங்களது உழுத்துப் போன அரசியலை ஓட்டப் பார்க்கிறார்கள். எந்தவொரு அரசியற் தீர்வு நடைமுறைக்கு வந்தாலும் இவர்கள் அந்தத் தேர்தல்களில் பங்கு பற்றி உறுப்பினராவதற்கும், அதனால் கிடைக்கும் சுகங்களை அடைவதற்கும் திருவிளையாடல் தருமி போல செயற்படுவார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

கேள்வி :-

**தமிழ் மக்களுக்கு நம்பிக்கை தரக்கூடிய புதிய தலைமைத்துவத்தின் அவசியம் தற்போது உணரப்பட்டிருக்கிறதே?**

பதில்:-

தமிழ் மக்களுக்கு என்ன நம்பிக்கையைத் தரக்கூடிய தலைமை தேவை என்பதில் தெளிவில்லாமல் புதிய தலைமை பற்றி பேசுவது அபத்தமானதாகும். இருபது ஆண்டுகளாக தமிழீழ நம்பிக்கையை ஊட்டி இழப்பையும் அழிவையுமே தந்த தலைமையானது தமிழ் மக்களுக்குக் கிடைக்கக் கூடியவற்றையெல்லாம் கிடைக்க விடாமல் பண்ணிவிட்டு போய்விட்டது.


பின்னர் "வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கு சமஷ்டி அடிப்படையிலான சுயநிர்ணய தமிழரசை" நிறுவவும்","சர்வதேச விசாரணை நடத்தி ராஜபக்ஸாக்களை கூண்டில்" ஏற்றவும், இராணுவத்தை வடக்கு கிழக்கை விட்டு வெளியேற்றவும் சர்வதேசங்கள் தமக்கு துணையாக நிற்பதாகவும், இந்தியா தமக்கு தோள் கொடுக்க தயாராக இருப்பதாகவும் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை கொடுத்து நடந்து முடிந்த அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இப்போது அம்பலப்பட்டு நிற்கிறது.

இப்போது அடுத்துவரும் தேர்தல்களில் வெல்லுவதற்காக புதிய போலி வேடங்களைப் போட்டுக் கொண்டு பொய்களையும் புழுகு மூட்டைகளையம் அவிழ்த்து விட்டு தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற புதிய தலைமைத்துவம் அவசியமே இல்லை. அவ்வாறானவர்கள் தேர்தல் வசிய வியாபாரிகளே தவிர மக்களின் நலன்களுக்கான தலைவர்களாக மாட்டார்கள்.

மக்களின் அடிப்படை உரிமைகள், இனங்களுக்கிடையில் உண்மையான சமத்துவத்தின் அடிப்படையிலான நல்லிணக்கம், மாநில சுயாட்சி அதிகாரங்களை அடிப்படையாகக் கொண்ட மாகாண சபைகள், முற்போக்கான பொருளாதார முன்னேற்றம், நீதியான சமூகக் கட்டமைப்பு, காத்திரமான சட்டத்தின் ஆட்சி, உண்மையான மக்களாட்சி அரசமைப்பு ஆகியவற்றிற்காக தம்மை அர்ப்பணித்து செயற்படும் தலைமையே இன்றைய தேவை. பரந்துபட்ட மக்களின் நலன்களை இலக்காகக் கொண்ட புதிய தலைமைத்துவமே மக்களின் நம்பிக்கைகளைத் திரட்ட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியலில் புலிகள் பற்றிய விமர்சனங்கள் தொடர்வது சரியானது தானா ?



க. கருணாகரன் உடுப்பிட்டி

**கேள்வி:**

**“தியாகிகள் தினம்” ஏன் கொண்டாடப்படுகிறது? அவர்கள் செய்த தியாகம் என்ன?**

**பதில்:**

“பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி” (பத்மநாபா ஈபிஆர்எல்எவ்) இப்பொழுது கால, அரசியல் மாற்றங்களுக்கும் யதார்த்தங்களுக்கும் ஏற்ப “தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி” (S.D.P.T). என்ற பெயருடன் ஒரு அரசியல் கட்சியாகவும், “பத்மநாபா மக்கள் முன்னணி” என்ற பெயருடன் ஒரு சமூக இயக்கமாகவும் செயற்பட்டு வருபவர்கள் “தியாகிகள் தினம்” என்ற பெயரில் வருடந்தோறும் கடந்த 27 வருடங்களாகத் தொடர்ந்து தமிழ் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் உயிர்நீத்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வினை நடாத்தி வருவது அனைவரும் அறிந்ததே. இவர்களால், “தியாகிகள்” எனக் கருதப்படுபவர்கள் - நினைவஞ்சலி செலுத்தப்படுபவர்கள், தமது அமைப்பைச் சேர்ந்தவர்களை மட்டுமல்ல. மாறாக ஆயுதம் ஏந்தியோ, ஏந்தாமலோ, தமிழ்பேசும் மக்களின் விடுதலை, விடிவு, அரசியல், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் ஆகியவற்றிற்காக மீளப் பெற முடியாத வாழ்க்கையும், உயிரையும் தியாகம் செய்த சகல போராளிகள், அரசியல் தலைவர்கள், அரசியல், சமூக செயற்பாட்டாளர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரையும் உள்ளடக்கியதாகும். கடந்த ஜூன் 2017 கண்ணோட்டம் இதழில் பிரசுரிக்கப்பட்ட நிழற்படங்கள் அதற்கு சிறு எடுத்துக்காட்டாகும்.

உயிர் பிழைத்திருக்கும் எமக்கு, அவர்களை நினைவு கூருவதுவும், அவர்களின் இழப்பால் தம் இயல்பு வாழ்வை தொலைத்து இன்னல்படுவோருக்கு உதவிக்கரம் நீட்டுவதுவும், அவர்களது அளப்பரிய அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் வீண் போகாது அர்த்தமுள்ளவையாக இருப்பதற்கு, எதற்காக அவர்கள் மடிந்தார்களோ அந்த இலட்சியங்களையும் நோக்கங்களையும், காலம், இலங்கை மற்றும் சர்வதேச யதார்த்தங்களுக்கு பொருத்தமான நமது அணுகுமுறைகள், செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற பாரிய கடமையை நினைவு படுத்தும் விதமாகவே தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.

அதே சமயத்தில், உயிரிழந்தவர்களை வைத்துப் பிழைக்கும் அரசியல் கனவான்கள், அதீத சுயநலம் கொண்டவர்கள் நம் மத்தியில் இருப்பதும் துரதிருஷ்டம் தான். - அவர்களைப் பற்றித் தமிழ் மக்கள் கவனம் கொள்வதுவும் அவசியமாகும்.

ச. ஐங்கரன் மட்டக்களப்பு

**கேள்வி:**

**பிரபாகரன் நிறுவிய புலிகளின் தலைமைத்துவம் இலங்கை இராணுவத்தினிடம் சரணடைந்து அழிக்கப்பட்ட பின்னரும் புலிகள் பற்றிய விமர்சனங்கள் தமிழ் அரசியலில் தொடர்வது சரியானது தானா?**

**பதில்:**

இறுதியில் நடந்தேறியது புலிகளின் தலைமைத்துவமும், கட்டுமானமும் அழிக்கப்பட்டது மட்டுந்தானா? - அளப்பரிய, கணக்கிலடங்கா மக்களின் உடமைகள், உயிர்கள், இருப்பிடங்கள், வாழ்வாதாரங்கள் ஆகிய வைகளின் இழப்புகளுடன், தமிழ்ச் சமுதாயத்தின் கட்டுக் கோப்புக்களும், பண்புகளுமல்லவா பாழாகிப் போய்விட்டன. புலிகளின் அரசியற் குருட்டுத்

## அபிமன்யு பதில்கள்

தனமான ஆயுதக் கலாச்சாரம், பாசிச ஆதிக்கம், எதேச்சாதிகார மேலாண்மை ஆகியன தமிழ்ச் சமூகத்தில் எதுவித நல்லதும், மேன்மையானதுமான மாற்றங்களை ஏற்படுத்தவில்லை. மாறாக, மாற்றங்கள் எனக் கருதப்பட்டவை பாரிய பாதகங்களை வளர்த்து விட்டவைகளாகவே ஏற்பட்டுள்ளன என்பது இப்பொழுது நாம் பார்க்கும், அனுபவிக்கும் நிதர்சனங்கள்.

அத்துடன் விடயங்கள் முடியவில்லையே! - புலிகளின் சார்பாக அமோகமாகப் பணம் வசூலித்தும், வீடுகள் மற்றும் வியாபார ஸ்தாபனங்களை வாங்கியும், அவற்றைத் தமக்குச் சொந்தமாக்கியவர்களும், புலிகள் என்ன தவறுகள் செய்தாலும், எதுவித அறப்பண்பும் இல்லாது, அவர்களின் செயல்களுக்கு ஆதரவு அளித்தவர்களும் தமது தவறுகள் பற்றி எதுவித மனக் கிலேசமும் இல்லாது, எதுவித மன்னிப்பையும் கோராது இன்னும் பெரிய பிரமுகர்களாகவும், அரசியல் தலைவர்களாகவும், தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிப்பவர்களாக இலங்கையிலும், வெளிநாடுகளிலும் வலம் வருகிறார்கள். - புலிகள் ஏற்படுத்திய அழிவுகளும், நாசங்களும் தமிழர்களின் எதிர்காலத்தை படுபயங்கரமான - மீளமுடியா துயர நிலைமைகளுக்கு உள்ளாக்கியுள்ளது. இருந்தும் புலிகளால் பணரீதியாகவும் பதவிகள் ரீதியாகவும் பலன்கள் பெற்றவர்கள் இன்னமும் தமிழ் மக்கள் மத்தியில் மோசடித்தனமான போலி அரசியலை நிலை நிறுத்தி வருகிறார்கள். தமிழர்களை இம்மியளவும் முன்னேறவிடாது தடையாக உள்ளார்கள்: தமிழ் மக்களை மேலும் அழிவுகளுக்குள்ளும் பின்னடைவுகளுக்குள்ளும் தள்ளிவிட முயல்கிறார்கள், மீண்டும் புலிகளின் பெயரால் மக்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கப் பார்க்கிறார்கள்: இவை போன்றவற்றாலேயே நாம் அரசியல் ரீதியில் ஓர் விமர்சனப் போராட்டத்தை நடாத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

செத்த பாம்பைக் கழுத்தில் சுற்றி தாண்டவமாடி மிரட்டும் போது, அந்தப் பாம்பின் விடமேறிய விழுமியங்களையும், விளைவித்த துன்பங்களையும் கொடூரங்களையும் மக்களுக்கு எடுத்துச் சொல்லி எச்சரிப்பது ஒரு சமூகப் பொறுப்பான கடமையாகும்.

இப்பொழுது புலித் தோலைப் போர்த்திக் கொண்டு அதனை வைத்து நாடகமாடும் பாசாங்குக்காரர்களே புலிகளை விமர்சிப்பதற்கு எம்மை நிர்ப்பந்திக்கிறார்கள். போதாக்குறைக்கு, சிங்களப் பேரினவாதிகளும், செத்து விட்டது என்று தெரிந்தும் செத்த பாம்பைச் சுழட்டிக் காட்டி, அது உயிருடன் இன்னும் மூச்சு விடுவதாகப் பெரிதுபடுத்தி, தமது இனவாத அரசியலை முன்னெடுத்து, பதவிகளை அடையவும், தமிழ் மக்களின் உரிமைகளை மேலும் நசுக்கவும், தமிழ்ப் பகுதிகளில் இராணுவத்தை நிலைப்படுத்தவும் அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவதை இழுத்தடிக்கவும் பயன்படுத்துகின்றனர்.

இவற்றின் காரணமாக, புலிகளைப் பற்றிய, புலியிசத்தின் கோர முகங்கள் பற்றிய விமர்சனங்கள், தவிர்க்க முடியாது போகின்றன. எதிர்கால அரசியல் பாதைகள், அணுகுமுறைகள், தீர்வுகள் பற்றிப் பேசும்போது, கடந்த காலப் பாடங்களைப் படிக்க முயலாத, விரும்பாத, அவற்றை வைத்து அரசியல் பிழைப்பும், சமூகப் பிரபல்யமும் பெற வேண்டி, [illegible] யான வழியில் மக்களை வழி நடாத்தி அவர்களை மேலும் படுகுழிகளுக்குள் வீழ்த்த முனைபவர்கள் பற்றி மக்கள் மத்தியில் நிலவும் அறியாமையைக்



களைய வேண்டியது தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றத்துக்கு அவசியமாகும்.

மேலே நான் கூறியுள்ளவற்றை ‘புலிகள்’ மற்றும் “புலிகளின் ஆதரவாளர்கள்” என்போர் முன்னால் வையுங்கள். செவிமடுப்பார்களேயானால், தமிழர் சமூகம் கடந்த கால பாதைகளிலுள்ள படுகுழிகளை அடையாளம் கண்டு, செல்ல வேண்டிய பாதைகளை சரிவர செப்பனிட்டுப் பயணிக்க முடியும். செய்ய வேண்டிய ஆக்கபூர்வமான விடயங்களிலும், செயற்பாடுகளிலும் எமது எதிர்கால அரசியல் பொருளாதார நகர்வுகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள முடியும்.

சரித்திரம் தரும் பாடங்களைக் கருத்தில் கொண்டும், கடந்த 30 வருட கால வரலாற்றைப் பற்றிய மீளாய்வு, தெளிவான புரிதல் ஆகியவற்றை மேற்கொண்டும் தம் பாதைகளைச் செப்பனிடாத மக்கள் குழுமமும், அரசும் வளம்பெறுவதோ, நிலைத்திருப்பதோ கடினம். மீளாய்வு புத்துயிர்ப்பின் மார்க்கம்.

## இந்திய வலையை தவிர்க்க ஓடிய ...

( 3 ம் பக்கத் தொடர்ச்சி )

தொழில் நுட்பங்களுக்கும் இந்திய உற்பத்தித்துறைகள் மற்றும் சந்தைகள் திறந்து விடப்பட்டன. இதனால் இந்தியாவுக்கும் மேலைத்தேச முதலாளித்துவ நாடுளுக்கும் இடையில் நேச உறவுகள் வளரத் தொடங்கின. அதன் தொடர் தாக்கமானது சிங்கள தேச வாத போக்குக்கு மேலைத் தேச நாடுகளின் ஆதரவு மேலும் தொடராது எனும் நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக இலங்கை அரசு சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடனான உறவை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் இலங்கையின் பெரும்பான்மை சக்திகள் மத்தியில் வலுவடைந்தது. இதனையே சீனாவானது தனது நீண்டகால நோக்கங்களுக்கு இசைவாக இலங்கையை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கான பொறியை விரிப்பதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டது. படிப்படியாக அருவமாக விரித்த பொறியை பொருத்தமான நேரத்தில் சீனா விசுவரூபம் எடுத்து தான் திட்டமிட்ட தளங்களை அகப்படுத்தி ஆழக் கால் பதித்துவிட்டது.

சீனாவின் கட்டுகளுக்குள் அணைந்து வாழ வேண்டிய கட்டாயம் இலங்கைக்கு ஏற்பட்டு விட்டது. இங்கு இந்தியாவும் சீனாவோடு இணைந்து சவாரிசெய்வதைத் தவிர மாற்று வழியேதும் அதற்கு இருக்கிறதா என்னும் கேள்விக்கு பதிலை எதிர்காலமே காட்டும்.

அபிமன்யு பதில்கள் கேள்வி பதில் பகுதிக்கு உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி :

அபிமன்யு பதில்கள்
கண்ணோட்டம்
இல: 294 A, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தோழர் கேதீஸ்

### தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

### தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்



தோழர் நாகேஸ்

அரச மற்றும் வர்க்க, சாதிய, பெண் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் பாசிச கருத்தியலை நிராகரித்தும் போராடி, ஆகஸ்ட் மாதத்தில் உயிர் நீத்த, எம்மிடம் பெயர் விரபங்கள் உள்ள தோழர்களின் பட்டியல் இது. இதே குறிக்கோள்களுக்காக உயிர்த்தியாகம் செய்த தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அவர்களை நினைவு கூருவோம்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| தைரியராசா (தைரி) | நாகேஸ் | 1987.08.11 | நற்பிட்டிமுனை |
| என். பகீரதன் | பகீரதன் | 1984.08.24 | கல்முனை |
| ரி.தெய்வீகராஜா | மோகன் | 1984.08.24 | சேனைக்குடியிருப்பு |
| எஸ்.விவேகாணந்தராஜா | ரஞ்சன் | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| சிவநேசமூர்த்தி | சதா | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| கே.சவுந்தரராஜன் | ரவி | 1985.08.24 | தம்பிலுவில் - 02 |
| பி.நடேசமூர்த்தி | மோசெஸ் | 1987.08.20 | பளுகாமம் |
| எஸ்.நித்தியானந்தன் | சனனி | 1987.08.01 | தேத்ததீவு |
|  | அலெக்ஸ் | 1988.08.25 | மகிலூர் |
| ஜேசுதாஸ் | ஜெயா மாஸ்ரர் | 1985.08.13 | முகத்துவாரம் |
| இராசநாயகம் சுகுமார் | சுகுமார் | 1987.08.17 | களுவாஞ்சிக்குடி |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| ஜே. ஞானப்பிரகாசம் | விஜி | 1990.08.20 | அம்பலாந்துறை |
| சீனித்தம்பி யோகராசா | ரஞ்சி | 2004.08.01 | மண்டூர் |
|  | பாபு | 1988.08.04 | கண்ணாட்டி |
| கதிர்காமநாதன் | தயாளன் | 20.08.1986 | சுழிபுரம் |
| க.இராஜேந்திரன் | குமார் | 21.08.1986 | பருத்தித்துறை |
| த.பத்மநாதன் | சங்கர் | 21.08.1986 | கண்டி |
|  | இமாம் | 10.08.1989 | அச்சுவேலி |
|  | ருபன் | 07.08.1989 | நீர்வேலி |
|  | பத்மன் | 06.08.1989 | ஆவரங்கால் |
| அ. கிறிஸ்ரியன் | பீற்றர் | 12.08.1989 |  |
| லோ.கேதீஸ்வரன் | கேதீஸ் | 12.08.2006 | கொழும்பு |
| சிவஞானம் |  | 14.08.1995 | கன்னங்குடா |

**தமிழ் பேசும் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் பங்கேற்று ஆகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் உயிர் நீத்தவர்களில் எம்மால் திரட்ட முடிந்த தோழர்களின் பெயர் விபரங்களை மட்டுமே இங்கே பிரசுரித்துள்ளோம். இங்கு நினைவு கூரப்பட்டுள்ள தோழர்களின் விபரங்களை பூரணப்படுத்துவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இங்கு பிரசுரிக்கத் தவறிய தோழர்கள் பற்றிய தகவல்கள் அவர்களது புகைப்படங்களை எமக்குக் கிடைக்கச்செய்து உதவுமாறும் தோழர்கள், அன்பர்கள், நண்பர்கள், குடும்பத்தவர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.**



தோழர் சுந்தரம்
காங்கேசன் துறை

### தமிழ் இனத்தின் அரசியல், சமூக, பொருளாதார விடுதலை வேண்டியும் ஜனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்குமான போராட்டத்தில்

### தம் உயிரை அர்ப்பணித்த, தோழர்கள், ஆதரவாளர்களை

# நினைவு கூருவோம்



தோழர் போல்
குருநகர்

அரச மற்றும் வர்க்க, சாதிய, பெண் ஒடுக்கு முறைகளுக்கு எதிராகவும் பாசிச கருத்தியலை நிராகரித்தும் போராடி, செப்ரெம்பர் மாதத்தில் உயிர் நீத்த, எம்மிடம் பெயர் விரபங்கள் உள்ள தோழர்களின் பட்டியல் இது. இதே குறிக்கோள்களுக்காக உயிர்த்தியாகம் செய்த தோழர்கள், ஆதரவாளர்கள் அனைவரதும் உழைப்புக்களும் தியாகங்களும் வீண்போகாது அவர்கள் விட்டுச் சென்ற பணியை, நம்பிக்கைகளை முன்னெடுத்துச் செல்வோம் என்ற உறுதியோடு அவர்களை நினைவு கூருவோம்

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| ஏ.அமிர்தலிங்கம் | ரஞ்சி | 06.09.1985 | மண்டூர் |
| கே.ராஜேந்திரன் | ஆதித்தன் | 18.09.1986 | தேத்தாதீவு |
| எஸ்.அழகானந்தம் | சிவா | 18.09.1986 | தேத்தாதீவு |
| கே.குருகுலசிங்கம் | ரூபன் | 11.09.1986 | கிரான்குளம் |
| வி.சுந்தரலிங்கம் | பகவான் | 06.09.1987 | மண்டூர் |
| முருகேசு சந்துரு | சந்துரு | 11.09.1989 | ஏறாவூர் |
| எம்.சங்கரப்பிள்ளை |  | 28.09.1987 | களுவாஞ்சிக்குடி, |
| கோதை | கோதை |  | கன்னங்குடா |
| தாமோதரம் வசந்தகுமார் | தேவன் | 19.09.1987 | தம்பிலுவில் |
| பிரதீப் | பிரதீப் | 29.09.1987 | ஏறாவூர் |

| பெயர் | தோழர் | இறப்பு | வசிப்பிடம் |
|---|---|---|---|
| பொ.கிருஷ்ணபிள்ளை | நவேந்தினி | 15.09.1990 | தாழங்குடா |
|  | அன்ரன் | 11.09.1989 | வாழைச்சேனை |
| எஸ்.கரன் | கரன் | 19.09.1989 |  |
| கண்னையா யோகராஜன் |  | 03.09.1986 | வட்டக்கட்சி |
| இன்பநாதன் | பைரவி | 20.09.1989 | அச்சுவெலி |
| வேதநாயகம் ரவீந்திரன் | ரவி | 19.09.1989 | மானிப்பாய் |
| சின்னராஜா வியாகரன் | கரன் | 19.09.1989 | சங்கானை |
| அல்பிரட் யோகராசா | போல் | 10.09.1986 | குருநகர் |
| ஜே.இ.செல்ரன் குரோஸ் |  | 02.09.1990 | யாழ்ப்பாணம். |
| ஏனஸ் | கண்ணன் | 19.09.1989 | சூராவத்தை. |
| வ.சுந்தரம் | சுந்தரம் ஐயா | 27.09.2004 | காங்கேசன்துறை |

## மரணத்தை அல்ல வாழ்கையை கொண்டாடுவோம் என்று பாடம்சொன்ன

# தோழர் கேதீஸ் அவர்களின் இழப்பு ஈடுசெய்யப்பட முடியாதது

லோகநாதன் கேதீஸ்வரன் என பலராலும் அறியப்பட்ட புலமையாளரும், இலங்கைத் தமிழர் அரசியலில் காத்திரமான பங்களிப்பை நல்கியவரும் கணிசமான அளவு காலம் ஈபிஆர்எல்எவ் இன் பேச்சாளராகவும், 11993 நடைபெற்ற காங்கிரசில் கட்சியின் மத்திய குழு மற்றும் அரசியல் பீட உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டவருமான தோழர் கேதீஸ் அவர்களின் நினைவு தினம் ஆகஸ்ட் 12 ஆகும். அவர் அளவிற்கு சுயகட்டுப்பாடும், நேர்மையும், ஒழுக்கமும், புலமையும் உள்ள ஒருவரை பொது அமைப்புக்களில் காண்பது அரிது. மக்களின் பேரால் செயற்படுகின்ற ஒரு கட்சி பொறுப்புணர்வோடு செயற்பட வேண்டும் என்பதில் எப்போதும் கண்ணுங்கருத்து மாயிருந்தார். அவரது ஆற்றல்கள், உழைப்பு, சேவை என்பன கட்சிக்கும் மக்களுக்கும் இல்லாமல் போனது துர்ப்பாக்கியமாகும்.

சரியான அரசியல் தலைமை இல்லை என்றும், அரசியல் வெற்றிடம் நிலவுவதாகவும் பேசுபவர்களுக்கு மத்தியில் கட்சி பொறுப்புக்களிலிருந்து விலகிய தோழர் கேதீஸ் 10.08.1994 அன்று சமர்ப்பித்த இராஜினாமா கடிதம் அவரது குணாம் சத்தையும், கட்சிமீது, அவர்கொண்டிருந்த நம்பிக்கையையும் தெளிவாகக் காட்டுவதாக அமைந்திருந்தது.

பழங்கதைகள் சொல்லி தோழர்கள் மீது அக்கறை மிக்கவர்கள் போலவும் எழுத்துக்களில் மட்டும் தோழர்களை நினைவு கூர்ந்து தமது மோசடிகளை மூடி மறைக்க நினைப்பவர்கள் குறித்து ஏற்கனவே எம்மை எச்சரித்திருக்கிறது அவரது கடிதம். அவர் ஆங்கிலத்தில் எழுதிய அந்த நீண்ட கடிதத்தின் சில பகுதிகளை மட்டும் பதிவு செய்கிறோம். அவரது நினைவு நாளில் இதனை வெளிக்கொண்டுவருவது பொருத்தமும், தேவையுமாகும்.

**அன்பார்ந்த தோழர்களே!**

இந்த ஆவணத்தை நான் ஒரு கனமான இதயத்துடன் தான் எழுதுகிறேன். ஆனாலும், நான் இங்கே குறிப்பிடுவன, கட்சியின் நலன் மற்றும் எனது சொந்த நலன் ஆகியவையின் அடிப்படையில், எனது சீரிய எண்ணங்களினதும், சார்பற்ற சிந்தனைகளினதும் விளைவாகும்.

முதலாவதாக, இந்த ஆவணம் இரண்டு நோக்கங்களைக் கொண்டதாகும் :-

(i) கட்சியிலிருந்து நான் ராஜினாமா செய்யும் முடிவையும், என் முடிவிற்குப் பின்னாலான காரணங்களையும் தெரிவிப்பது.

( தொடர்ச்சி 11 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் ஜனநாயகம் மரணிக்கிறதா?




## அன்பார்ந்த வாசகர்களே.


வி. சிவலிங்கம்

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பு வரையும் முயற்சி பல கேள்விகளை எழுப்பி வருகிறது. உதாரணமாக புதிய அரசியல் அமைப்புத் தேவையில்லை என பௌத்த மத பீடாதிபதிகள் தெரிவித்ததைத் தொடர்ந்து அம் முயற்சிகள் மீண்டும் தேக்க நிலைக்குச் சென்றுள்ளன. தேர்தலில் மக்களிடம் அரசியல் அமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவோம் எனத் தெரிவித்து வாக்குகளைப் பெற்றுப் பதவிக்கு வந்த அரசு தற்போது மக்களால் தெரிவு செய்யப்படாத மத அமைப்புகளின் கருத்துகளுக்குப் பணிந்து செல்வது ஜனநாயக செயல்முறையைக் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

இம் மாதிரியான நிலைமை இலங்கைக்கு மட்டும் உரித்தான ஒன்று அல்ல. முதலாளித்துவ அடிப்படையிலான நவ தாராள வாத பொருளாதாரக் கட்டமைப்பைப் பின்பற்றும் நாடுகளில் இதுவே இன்றைய போக்காகும்.

பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது எனத் தீர்மானித்த பின் ஏற்பட்டுள்ள நிலமைகள் ஜனநாயகத்தின் எதிர்காலம் குறித்த கேள்விகளை பலமாக எழுப்பியுள்ளது. 52 சதவீத மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாகவும், 48 சதவீத மக்கள் இணைந்து தொடர்ந்து செற்படுவதற்கும் வாக்களித்தனர். சுமார் 4 சதவீத மக்களின் அதிகப்படியான வாக்குகளுக்காக 48 சதவீத மக்களின் அபிலாஷைகளை நிராகரித்துச் செல்வது எந்த வகையில் ஜனநாயகம் என்ற கேள்வி எழுகிறது. பிரிந்து செல்வதற்கு ஆதரவாக செயற்படும் இன்றைய கன்சவேட்டிவ் அரசிற்குள் முற்றாக துண்டித்து வெளியேறுவதா? அல்லது மென்மையான வகையில் பிரிவைக் கையாள்வதா? என்ற வாதங்கள் தற்போது எழுந்தள்ளன. அதாவது பிரிந்து செல்லும் போக்கினை நிறுத்தினால் கட்சி அழிந்துவிடும் என எண்ணும் அதே வேளையில் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றால் நாட்டினை அழிப்பதாக முடியும் என்ற அளவுக்கு சிந்தனைகள் செல்கின்றன.

இச் சிக்கல் எங்கிருந்து எழுந்தது? என்பதை நாம் ஆராய்வது அவசியம். ஏனெனில் இதே போன்ற ஆபத்து இலங்கையிலும் காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவதா? இல்லையா? என இரண்டு தெரிவுகளுக்குள் பாரிய பிரச்சனைகள் அடங்கிய செயற்பாட்டினைச் சுருக்கியது பெரும் தவறு என தற்போது எண்ணுகின்றனர். பொருளாதாரச் செயற்பாடு, வேலைவாய்ப்பு, வேலையில்லாத் திண்டாட்டம், அந்நியர்களின் குடியேற்றம் என பல சிக்கல்கள் நிறைந்த தீர்மானத்தினை ஆதரவா? இல்லையா? என்ற குறுகிய தெரிவுக்குள் தள்ளியதால் ஏற்பட்ட வினையே அதுவாகும்.

**பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறுவது எனத் தீர்மானித்த பின் ஏற்பட்டுள்ள நிலமைகள் ஜனநாயகத் தின் எதிர்காலம் குறித்த கேள்விகளை பலமாக எழுப்பியுள்ளது. 52 சதவீத மக்கள் வெளியேறுவதற்கு ஆதரவாகவும், 48 சதவீத மக்கள் இணைந்து தொடர்ந்து செற்படுவதற்கும் வாக்களித்தனர். சுமார் 4 சதவீத மக்களின் அதிகப்படியான வாக்குகளுக்காக 48 சதவீத மக்களின் அபிலாஷைகளை நிராகரித்துச் செல்வது எந்த வகையில் ஜனநாயகம் என்ற கேள்வி எழுகிறது. பிரிந்து செல்வதற்கு ஆதரவாக செயற்படும் இன்றைய கன்சவேட்டிவ் அரசிற்குள் முற்றாக துண்டித்து வெளியேறுவதா? அல்லது மென்மையான வகையில் பிரிவைக் கையாள்வதா? என்ற வாதங்கள் தற்போது எழுந்தள்ளன. அதாவது பிரிந்து செல்லும் போக்கினை நிறுத்தினால் கட்சி அழிந்துவிடும் என எண்ணும் அதே வேளையில் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்றால் நாட்டினை அழிப்பதாக முடியும் என்ற அளவுக்கு சிந்தனைகள் செல்கின்றன.**

### கட்சிகளின் அரசியல் கோட்பாடுகளும் மக்களின் அபிலாஷைகளும்

அரசியல் கட்சிகளும் பெரும் சங்கடத்தில் மாட்டியுள்ளன. உதாரணமாக பெரும் தொழிலாளர் ஆதரவைப் பெற்றிருக்கும் எதிர்க்கட்சியான தொழிற்கட்சி தொழிலாளர்களின் குரலுக்கு செவிமடுப்பதா? அல்லது ஐரோப்பிய சந்தைக்குள் தொடர்ந்து இருப்பதை வற்புறுத்துவதா? என்ற சிக்கலுக்குள் உள்ளது. ஐரோப்பிய சந்தைக்குள் தொடர்ந்து இருந்தால் ஐரோப்பியர்களின் வருகையைக் கட்டுப்படுத்த முடியாது. அவ்வாறானால் பிரித்தானிய தொழிலாளர்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவார்கள். ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறினால் 500 மில்லியன் மக்களின் பாரிய சந்தை வாய்ப்பை இழக்க நேரிடும். அதனால் வேலைவாய்ப்பு பாதிக்கப்படும். இது பாரிய தர்ம சங்கடமான நிலை.

இலங்கையில் புதிய அரசியல் அமைப்பினை மக்களின் வாக்கெடுப்பிற்கு விடவேண்டுமென கூட்டமைப்பு வற்புறுத்துகிறது. சிங்களக் கட்சிகள் சிலவும் கோருகின்றன. புதிய அரசியல் யாப்பினை ஆதரிப்பதா? இல்லையா? ஏன தேசியப் பிரச்சனைகளின் பல அம்சங்களைக் கொண்ட யாப்பினை மிகவும் சுருக்கி ஆமா? இல்லையா? ஏன இரட்டைத் தெரிவுக்குள் அடக்கி மக்களின் அபிப்பிராயத்தைக் கோருவது சரியான அணுகுமுறையா? இதனால் கிடைக்கும் ஆம் அல்லது இல்லை என்ற முடிவு சகல பிரச்சனைகளுக்குமான தீர்வாக அமையுமா? எனக் கேட்கத் தோன்றுகிறது.

பிரித்தானிய தொழிற்கட்சி இப் பிரச்சனையில் தெளிவான, இறுக்கமான முடிவுக்குச் செல்ல முடியவில்லை. இதற்குக் காரணம் தேர்தல் முறை அரசியலாகும். இதுவே இலங்கை அரசியல் எதிர்நோக்கும் பிரச்சனையாகும். இரண்டு பிரதான அரசியல் கட்சிகளே பிரித்தானிய அரசியலில் ஆதிக்கம் வகிக்கின்றன. இந்த இரண்டு அரசியல் கட்சிகளும் இரு வேறுபட்ட அரசியல் கோட்பாடுகளுக்குள் தம்மை ஆழ்த்தியுள்ளன. இவற்றால் அவற்றிற்கு வெளியில் வர முடியவில்லை. ஆனால் மக்களின் அபிலாஷைகள், தேர்வுகள் மாறியுள்ளன. ஆனால் அவற்றை வெளிப்படுத்தவதற்கான மாற்று வாய்ப்புகள் இல்லை. அதனால் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் அரசு நிறுவனங்களில் தமது அதிகளவு பங்களிப்பைக் கோருகின்றனர். தற்போதைய அதிக வாக்கைப் பெற்றவர் பாராளுமன்றம் செல்லும் தேர்தல் முறை காரணமாக எதிர்த்து வாக்களித்தவர்களின் வாக்குகள் செல்லுபடியற்றதாக மாற்றப்படுகின்றன. அவர்களுக்கான பிரதிநிதித்துவம் இல்லாமல் போகிறது. எனவே விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை வற்புறுத்துகின்றனர். இதனைப் பாரம்பரிய ஆதிக்க கட்சிகள் எதிர்க்கின்றன.

இதன் காரணமாக பாரம்பரிய அரசியல் கட்சிகள் மிகவும் பிரச்சனைகளை எதிர்நோக்குகின்றன. மக்கள் அரசியல் செயற்பாடுகளில் ஈடுபாடுகளைக் குறைத்து வருகின்றனர். ஏனெனில் தேர்தல் எதுவும் மாற்றங்களைத் தரவில்லை. தேர்தலில் ஒன்றைக் கூறி வாக்குகளைப் பெற்றவர் தேர்தலின் பின்னர் பல்தேசிய நிறுவனங்களால் அல்லது ஆதிக்க பிரிவினரால் விலைபேசப்படுகிறார். இதனால் அவர்கள் மக்களைப் போதுமான வகையில் பிரதிநிதித்தவப்படுத்துவதில்லை. கொடுத்த வாக்குறுதிகளைக் காப்பாற்றுவதில்லை. உதாரணமாக சுன்னாகம் எண்ணெய்க் கசிவு தொடர்பாக மக்களின் பாவனைக்குரிய நிலத்தடி நீர் பாதிக்கப்படுவதைத் தடுக்கவென மாகாணசபை அமைச்சர் ஒருவர் குழுவொன்றை அமைத்தார். இறுதியில் அந்த அறிக்கை மக்களுக்கு விரோதமான அறிக்கையாக மாறியது. அமைச்சர் பாரிய நிறுவனங்களின் நலன்களைப் பாதுகாப்பவராக மாறியதாக மக்கள் கருதினர். நிலத்தடி நீரைப் பாதுகாக்கச் சென்றவர் ஈற்றில் கடல் நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தை அறிவிக்கும் ஒருவராக மாறினார்.

### நெருக்கடிக்குள்ளான பொருளாதாரம் கேள்விக்குள்ளாகும் ஜனநாயகம்

இன்று ஜனநாயகம் பாதிக்கப்பட்டுள்ளமைக்கு பிரதான மூன்று காரணங்கள் கூறப்படுகின்றன.

1. தற்போது காணப்படும் பொருளாதாரத்தின் தீவிர வளர்ச்சியும், தொழில்நுட்ப மாற்றங்களும்.
2. ஆழப்படுத்திச் செல்லும் சமூக மற்றும் கலாச்சார தனிமைப்படுத்தல்.
3. உண்மை எதுவென அறிவதில் உள்ள சிக்கல்கள்.

மேற்குறிப்பிட்ட அம்சங்களில் பொருளாதார அபிவிருத்தி அல்லது பொருளாதார பங்களிப்பில் அதிக மக்களை எவ்வாறு ஈடுபடுத்துவது? வாக்களிக்கும் மக்களின் விருப்பங்களை நடைமுறையிலுள்ள அரசியல் கட்டமைப்பிற்குள் எவ்வாறு இணைப்பது? அடையாளங்களை வற்புறத்தும் தேசிய வாதத்தினை பல்தேசிய இன சமூகத்தில் எவ்வாறு ஈர்த்துக் கொள்வது? பல்தேசிய நிறுவனங்களின் அல்லது ஆதிக்கப் பிரிவினரின் ஊதுகுழலாக மாறி உண்மைகள் மறைக்கப்படும் ஊடகங்களின் போக்கு போன்றவற்றால் ஜனநாயகம், பத்திரிகைச் சுதந்திரம் என்பன உண்மையாக நிலவுகின்றனவா? என்ற கேள்விகள் எழுகின்றன.

இவ்வாறான பிரச்சனைகளுக்கு அந்த ஆட்சி யந்திரம் இடமளிக்காதபோது அவ் யந்திரத்திற்கு எதிராக மாற்றத்தை மக்கள் கோருகின்றனர். தற்போது தேசிய இறைமை என்பது மிகவும் சவால்களைச் சந்திக்கிறது. இதற்குக் காரணம் நவ தாராளவாத பொருளாதாரக் கொள்கைகளின் அமுலாக்கத்தால் ஏற்பட்ட எதிர் விளைவுகளாகும். உதாரணமாக முதலாளித்தவ போட்டிப் பொருளாதாரம் காரணமாக மலிவான கூலியைப் பெ[illegible] நாட்டிற்குள் அகதிகள், மனித நேயம் என்ற போர்வையில் அந்நியர்கள் அனுமதிக்கப்பட்டனர். இவர்களின் வருகை அந்த நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தைப் பாதித்தது. இதன் விளைவாக 2016ம் ஆண்டில் பிரித்தானியாவில் நடைபெற்ற ஐரோப்பிய ஒன்றிய விலகல் வாக்கெடுப்பு, அமெரிக்காவில் டொனால்ட் டிரம்ப் அவர்களின் தேர்வு போன்றன அதிகார வர்க்கத்திற்கு எதிரான போக்குகளாகவும், தேசிய கலாச்சாரம், தேசிய பொருளாதாரம் என்ற கோஷங்களாகவும் மாறின. ஐரோப்பிய நாடுகள் தமது நாடுகளின் இறைமை என்ற போர்வையில் எல்லைகளை மூடப்போவதாக பகிரங்கமாக அறிவித்தன. இங்கு அடிப்படை மனித உரிமை மீறப்படுகிறது. இவை தீவிர வலதுசாரி அரசியலுக்கான களங்களாக மாறின.

வலதுசாரி அரசியல் இயக்கங்களின் வளர்ச்சி அரசியல் மையப் புள்ளிகளின் போக்கை ஆட்டம் காணச் செய்தன. இதற்கான பிரதான காரணங்களாக பின்வரும் ரேபாக்குகளை அடையாளப்படுத்தலாம்.

பொருளாதாரம் சர்வதேச மயப்படுத்தப்பட்டதால் பல நாடுகளின் பொருளாதாரம் துரித வளர்ச்சி அடைந்தது. போட்டியும், வினைத் திறனும் அதிகரித்தது. வறுமையும், நாடுகளுக்கிடையேயான பொருளாதார ஏற்றத் தாழ்வும் மாற்றம் கண்டது. இருப்பினும் அரச யந்திரத்திற்கு எதிரான போராட்டங்கள் அதிகரித்தன. 2008ம் ஆண்டு உலகப் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடி ஏற்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அதன் காரணமாக ஜனநாயக அரசுகள் பல ஆட்டம் கண்டன. ஆனாலும் அமெரிக்கா போன்ற சில நாடுகள் பெரும் செல்வத்தைக் குவித்தன.

2009ம் ஆண்டிற்கும், 2012ம் ஆண்டிற்குமிடையே உலகத்தின் அதிக வருமானம் பெறும் 1 சதவீதத்தினரின் வருமானம் 31 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்தது. மிகுதி 99 சதவீமான மக்களின் வருமானம் 0.5 சதவீதமே அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியடைந்த 25 நாடுகளிலுள்ள 540 மில்லியன் இளம் தலைமுறையினரின் வருமானம் அவர்களது பெற்றோரின் வருமானத்தை விட மிகக் குறைந்ததாக மாறியது.

**2009ம் ஆண்டிற்கும், 2012ம் ஆண்டிற்குமிடையே உலகத்தின் அதிக வருமானம் பெறும் 1 சதவீதத்தினரின் வருமானம் 31 சதவீதத்திற்கு மேலாக அதிகரித்தது. மிகுதி 99 சதவீமான மக்களின் வருமானம் 0.5 சதவீதமே அதிகரித்தது. பொருளாதார வளர்ச்சியடைந்த 25 நாடுகளிலுள்ள 540 மில்லியன் இளம் தலைமுறையின்ரின் வருமரனம் அவர்களது பெற்றோரின் வருமானத்தை விட மிகக் குறைந்ததாக மாறியுள்ளது.**

இதன் காரணமாக சமூக மற்றும் கலாச்சார விழுமியங்கள், இனக்குழும வளர்ச்சிப் பரிமாணம் போன்றன அரசியல் விவகாரங்களாக பலமாக வளர்ந்துள்ளன. பொரளாதார சர்வதேச மயமாக்கலின் பயனாகவே இப் பிரச்சனைகள் எழுந்துள்ளன. ஆனால் பொருளாதார பலாபலன்கள் சாமான்ய மக்களைச் சென்றடையாத காரணத்தால் மக்கள் அரச சிறுவனங்கள் மேல் நம்பிக்கை இழந்து ஜனநாயக அரசியலைக் கேள்விக்குட்படுத்துகின்றனர்.


**வாசகர்களே!**

இக் கடிதம் சற்று ஆழமாகச் சென்றுள்ளதை உணர்கிறேன். இலங்கையிலும், பிரித்தானியாவிலும், அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளிலும் தற்சமயம் காணப்படும் நிலமைகள் ஜன நாயகத்தின் எதிர்காலம் குறித்த கவலைகளை அதிகரித்துள்ளன. இவை உங்கள் பலரின் கவலைகளாக இருக்குமென்பதில் சந்தேகமில்லை. குறிப்பாக இலங்கையின் புதிய அரசியல் யாப்பு வரைவதில் காணப்படும் தடைகளும், அவை குறித்து தமிழ் தலைமைகள் காட்டும் மெத்தெனப் போக்கும் மிகவும் பாதிப்பைத் தருகின்றன. அதன் விளைவாக இக் கடிதத்தினைச் சற்று ஆழமாக எழுதியுள்ளேன். பொறுப்பீர்கள் என நம்புகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசியப் பிரச்சினை விடயத்தில் அதிகாரப்பகிர்வு வேண்டும்

## இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டியூ குணசேகரா "சமாதான நோக்கு" சஞ்சிகைக்கு பேட்டி



**புதிய அரசியலமைப்பொன்றை நிறைவேற்றிக்கொள்ளும் விடயத்தில் நாட்டிலுள்ள அரசியல் கட்சிகள் பல அணிகளாகப் பிரிந்துள்ளன. கம்யூனிஸ்ட் கட்சி எந்த அணியில் உள்ளது?**

புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படுவது எங்களுக்கு ஒரு பிரச்சினை அல்ல. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கி, தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்து ஜனநாயகத்தை மீண்டும் உறுதி செய்யவேண்டும். அதை நாங்கள் வரவேற்கின்றோம்.

1978 இல் ஜே.ஆர் ஜெயவர்த்தனா, அரசியலமைப்பு உருவாக்கப்படு முன்னர் தேசிய பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படுமென அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அதை நிறைவேற்றவில்லை. 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் கொண்டுவரப்படுவது வரை அவர்கள் எதையும் செய்யவில்லை. 13 ஆவது அரசியலமைப்பு திருத்தம் இந்தியாவின் அழுத்தம் காரணமாகவே நடந்தது. அழுத்தம் கொடுத்திராவிட்டால் அதுவும் இல்லை. தேசியப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்க அது ஓர் அரிய சந்தர்ப்பமாக இருந்தது. ஆறில் ஐந்து பெரும்பான்மைப் பலமும் இருந்தது. அந்தத் தேர்தலில் தமிழ் மக்களில் அதிகமானோர் ஐக்கிய தேசியக் கட்சிக்கே வாக்களித்திருந்தனர். அனைத்து கட்சிகளும் இணைந்து பொதுவான ஒரு நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். ஆனால், இன்று அதற்கான களம் இல்லை. பல பிரச்சினைகளைக் காரணம் காட்டி இதிலிருந்து தப்புவதற்கே பலரும் முயற்சி செய்கின்றனர்.

சந்திரிகாவின் ஆட்சியில் மற்றுமொரு வாய்ப்பு கிடைத்தது. 2000 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு வரைவில் தீர்வு யோசனைகள் எல்லை மீறி இருந்தன என்றே கூற வேண்டும். ஆனால், அதுவும் சாத்தியமாகவில்லை. நானும், சொக்ஸியும், பேணாட் சொய்சாவும் பற்றி வீரக்கோனும் 6 மாதங்களாக இது பற்றிப் பேசினோம். உண்மையாகவே இதற்காக அதிகம் உழைத்தவர் சொக்சிதான். சந்திரிகா சொக்சியை கட்டி அணைத்து பாராட்டிய தருணம் என் நினைவில் நிற்கின்றது. அந்த வரைவு பாராளுமன்றத்தில் தீக்கிரையாக்கப்பட்டது அதுவும் எமது துரதிர்ஷ்டம் தான்.

**எவ்வாறாயினும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயும் இந்த விடயத்தில் பொதுவான ஒரு கருத்து இல்லையே?**

நாங்கள் மஹிந்தவுக்கு களப்பணி ஆற்றியிருப்பது வேறு விடயம் சகல அரசியல் கட்சிகளும் இந்த அரசியலமைப்பை மாற்ற வேண்டுமெனத் தெரிவித்த முதல் சந்தர்ப்பம் இது. அதை யாராலும் மறுக்க முடியாது இதற்கு முன்னர் அவ்வாறான சந்தர்ப்பம் கைகூடவில்லை.

உதாரணமாக தொண்டமான் போன்றவர்கள் நாட்டின் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் வாய்ப்பு தமக்கே உள்ளது எனக் கூறியதுண்டு. ஆனால், 30 வருட கால அனுபவம் அந்த நம்பிக்கையை தகர்த்துள்ளது. ஆகவே, இதை மாற்ற வேண்டும். என்பதே எமது கருத்து இதற்காக எமது கட்சி தனித்து நின்றும் தொழிற்சங்கம் என்ற வகையில் ஏனைய அமைப்புக்களோடு இணைந்தும் செயற்படுகிறது. இது தவிர ஜனாதிபதியையும் சந்தித்தோம் எங்களுடைய அரசியல் குழு முழுவதுமாக அந்த சந்திப்பில் பங்கேற்றது.

**உங்களுடைய கட்சி அரசியலமைப்பை மாற்றவேண்டும் எனக் கூறினாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் அதற்கு இழுபறி நிலை காணப்படுகின்றது. மறுபுறத்தில் பிரதான இரு கட்சிகளின் தலைவர்கள் இடையேயும் பொதுவான ஒரு கருத்து இருப்பதாகத் தெரியவில்லையே?**

இவ்விரு கட்சிகளின் தலைவர்களிடமும் பல குறைபாடுகள் இருப்பதை நாம் அறிவோம். நடந்துகொள்ளும் விதத்திலும் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் தொடர்பாகவும் குறைபாடுகள் உள்ளன. தற்போது மஹிந்தவும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும் என்று கூறினாலும் நடவடிக்கைகள் அதற்கு எதிர்மாறானதாகவே உள்ளது. குறுகிய மனப்பான்மையுடன் செயற்படுகிறார். அவர் மட்டுமல்ல அனைத்து கட்சிகளும் அதிகாரத்தை தக்கவைக்க இதைத்தான் செய்கின்றன.

**ஒருசிலர் புதிய அரசியலமைப்பை கொண்டுவர இது தருணமல்ல என்கின்றனர். குறிப்பாக தீர்க்க வேண்டிய வேறு பிரச்சினைகள் உள்ள நிலையில் அவர்களின் கருத்து புதிய அரசியலமைப்பு அவசியமற்றது என்பதா?**

நாட்டிலுள்ள பொருளாதார பிரச்சினைகள் மிகவும் பாரதூரமானவை. அனைவரும் அதையே கையிலெடுக்கின்றனர். அரசியலமைப்பின் முக்கியத்துவத்தை அறிந்தவர்களும் கல்விமான்களும் மட்டுமே அதைப்பற்றி பேசுகின்றனர். பொது மக்களின் அதிக கவனம் பொருளாதார பிரச்சினைகளில் உள்ளது.

சந்திரிகாவின் ஆட்சிகாலத்தில் அரசியலமைப்பு பற்றி இரண்டு கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டன. முதலாவது சந்தர்ப்பத்தில் 20 சதவீதமானோர் விருப்பம் தெரிவித்தனர். எங்களுடைய பிரசார நடவடிக்கையைத் தொடர்ந்து அது 60 சதவீதமாக உயர்ந்தது. சந்திரிகா, இராணுவத்துடன் இதுபற்றிப் பேசும் பொறுப்பை என்னிடம் தந்திருந்தார். நான் அப்போது ரூப





வாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக இருந்தேன். இராணுவத்திலுள்ள உயரதிகாரிகள் 800 பேருடன் பேசினேன். ஜீ.எல். பீரிஸ் அரசியலமைப்பு விவனார அமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், இராணுவத்தோடு பேசும் பொறுப்பு எனக்கே தரப்பட்டது. கேள்விகளை முன்வைக்க அவர்களுக்கு 2 மணி நேரத்தை கொடுத்தேன். பொலிஸாரை இதில் இணைத்துக்கொண்டோம். அரச அலுவலர்களும் பிரசார நடவடிக்கையில் இணைந்து செயற்பட்டனர். இதுவே பிரசாரமொன்றை முன்னெடுப்பதற்கான வழி.

**ஆம், இவ்வாறான முழு அளவிலான வேலைத்திட்டம் ஒன்று தேவை. அரசாங்கத்தை அவ்வாறான ஒரு வேலைத்திட்டத்திற்குக் கொண்டு செல்ல நாம் முயற்சி செய்ய வேண்டுமல்லவா?**

ஜனாதிபதியிடம் அவ்வாறான ஒரு சிந்தனை இல்லை. அவருக்கு காலையில் யாராவது எதையாவது சொன்னால் அவர் அதையே செய்வார். மக்கள் தான் அவரை தெரிவு செய்துள்ளனர். கட்சிக்குள்ளும் முரண்பாடு உள்ளது. இரண்டு பிரதான கட்சிகளிடமும் புரிந்துணர்வு இல்லை. அனாவசியமான பிரச்சினைகளை கைவிட்டு வேலை செய்ய வேண்டும். சைட்டம் தொடர்பாக அரசாங்கம் பல கருத்துக்களை கொண்டிருக்கின்றது. ஒரே நிலைப்பாட்டில் இருப்பது ராஜிதவும், எஸ்.பி. திஸநாயக்கவும் மட்டுமே. மற்றவர்களிடம் எந்த நிலைப்பாடும் இல்லை. லக்ஷ்மன் கிரியெல்லவிற்கு ஒரு சபாநாயகர் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பது தெரியாது. இதுவரை அப்பதவியை வகித்தவர்களில் இவர் மிகவும் மோசமான சபாநாயகர் என்று கூறலாம். அமைச்சர் பதிலளிக்க வேண்டிய கேள்விக்கு, பிரதமர், ரஞ்சன் ராமநாயக்காவை பதிலளிக்குமாறு கூறுகிறார். அதற்கிடையில் சபாநாயகர் சபையை வழிநடத்த அனுமதிகேட்டு திண்டாடுகிறார். இவ்வாறான நடவடிக்கைகள் தேவையற்ற முரண்பாடுகளை உருவாக்குமென்றே நான் கருதுகிறேன். இது பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளை அப்பட்டமாக மீறும் செயல். நல்லாட்சி என்ற போர்வையில் நடப்பது இதுதான்.

**எவ்வாறாயினும் கிடைத்துள்ள வாய்ப்பினை தவறவிடக் கூடாதல்லவா?**

எங்களுடைய நிலைப்பாடும் அதுதான் இதைத் தவற விடுவோமானால் மிக நீண்ட காலம் காத்திருக்க நேரிடலாம். கைநழுவிப் போன சந்தர்ப்பங்கள் பல, எமது அரசியலில் நாம் முட்டி மோதியதெல்லாம் தேசியப் பிரச்சினைக்காகவே இதை சகலரும் அறிவர்.

**அவ்வாறாயின் இந்தத் தலைவர்களுக்கு அழுத்தம் கொடுத்து அவர்களை சரியான இடத்திற்கு நகர்த்த வேண்டும் அல்லவா?**

ஆம், அதை முடியுமானவரை பரந்த மட்டத்தில் செய்ய வேண்டும். இந்த விடயத்தில் சேறு பூசுவதைத் தவிர்த்து அரவணைத்துத் தடுக்க வேண்டும். சுயாதீனமாக இயங்குபவர்களும் இணைந்துகொள்ள வாய்ப்பிருக்க வேண்டும்.

நாங்கள் ஏற்கனவே தாமதித்துவிட்டோம். அரசாங்கம் இதற்கு முன்னுரிமையளித்து செயற்பட வேண்டும். ஜனாதிபதி இதற்குத் தலைமை தாங்கினால் பலரும் இணைந்துகொள்வார்கள். நாங்கள் ஜனாதிபதியிடம் இதுபற்றி 3 மணி நேரம் பேசினோம். தமிழ் தேசியக் கூட்டமைப்போடும் ஜனாதிபதி பேசியிருக்கின்றார். தமிழ் கட்சி ஒன்று இந்தளவுக்கு நெகிழ்ச்சிப் போக்கை கடைப்பிடித்திருப்பது இதுவே முதல் சந்தர்ப்பம்.

சித்தார்த்தன் பற்றிக் கூற வேண்டும் அவருக்கு மக்கள் மத்தியில் வரவேற்பு உள்ளது. நாங்கள் அனைவரும் ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கின்றோம். இந்தப் பிரச்சினை கம்யூனிஸ்ட் கட்சி என்ற வகையில் தோழர் சுபசிங்ஹ தொடக்கத்திலிருந்தே இதற்கு ஆதரவாக இருக்கின்றார்.

அப்படியான ஒரு பிரசாரத்தை முன்னெடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு பிரதேசத்திலும் அரசியல் அறிவு உள்ளவர்களை இணைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு எதிராக இனவாதப் பிரசாரம் ஒன்றும் முன்னெடுக்கப்படுவது தெரிந்ததே. இதற்கு எதிரானவர்கள் மக்களை பீதியடையச்செய்து வேறு நிலைமைகளை உருவாக்கி விடுகின்றனர்.

ஆகவே ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒற்றுமையுடன் செயற்பட வேண்டியது அவசியமாகும். மக்கள் பிரதிநிதிகளுக்கும் கூட இது பற்றிய விழிப்புணர்வு இல்லை. அவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.

அதிகாரப்பகிர்வு என்பது ஜனநாயகத்தை விஸ்தரித்தல் என்பதை நம் மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும். இதன் நன்மைகள் தமிழர்களுக்கு மட்டும் உரியவை அல்ல என்பதை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். அரசியல்வாதிகள் இதற்கான ஆரம்பத்தை கொடுப்பதை விட சுயாதீனமானவர்களிடமிருந்து தொடங்க வேண்டும்.

**இதற்கு அரசியல் தலைமைத்துவம் அவசியமான ஒன்றல்லவா?**

நாங்கள் மஹிந்த ராஜபக்ஸவுக்கு தான் பணியாற்றிய எதிர்க்கட்சியில் அமரவேண்டும் என்பது எங்களுடைய நிலைப்பாடு சில பொருளாதாரப்பிரச்சினைகள் தொடர்பான மக்கள் விடுதலை முன்னணியின் விமர்சனங்களோடு நாங்கள் உடன்படுகின்றோம். தேசியப் பிரச்சினை விடயத்தில அதிகாரப்பகிர்வு வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாங்கள் விலகவில்லை. அதே போல் ஒருசில விடயங்களில் நாம் மஹிந்த ராஜபக்ஸவிற்கு ஆதரவாக உள்ளோம். நுகேகொடையில் நடந்த கூட்டத்திற்கு அழைப்பு வந்திருந்தது. நான் செல்லவில்லை காரணம் இனவாதம் பேசியதுதான். நாங்கள் வாழப்போவது கொஞ்சக் காலம் தான். நாங்கள் செய்த நல்ல காரியங்கள் மட்டுமே எஞ்சியிருக்கும் அரசியல் வாதிகள் உண்மையாகவே சந்தர்ப்பவாதிகள். அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்பதைத் அவர்கள் நன்கு அறிவார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இதை மாற்ற வேண்டும் எனக் கூறும் ஒரு சாரார் உள்ளனர். ஆனால், அரசாங்கத்திடம் அதற்கான உபாயங்கள் இல்லை.

பிக்குமார்கள் இதனை தீவிரமாக எதிர்க்கின்றனர். அவர்களுடைய நிலைப்பாட்டுக்கு என்னால் ஒருபோதும் இணங்க முடியாது. பௌத்தயா அலைவரிசையை எடுத்துக்கொண்டால் போயா தினத்தில் அறப்போதனைகளை கேட்பவர்களுக்கு "தெவிந்து குமாரதுங்கவும்" மனோகரா டி சில்வாவும் இன்னும் சிலரும் நாட்டைப் பிரிக்கப் போவதாக கூறுகின்றனர்.

சிறந்த முறையில் அறப்போதனைகள் செய்யும் பிக்குமார்கள் இருக்கின்றனர். இவர்கள் போதனை செய்வது சீலம் அனுஷ்டித்த உபாசகர்களுக்கு, உபாசிகைகளுக்கு ஜனாதிபதி இதை அறிவாரா என்பதை எனக்கு தெரியாது. இதுபோன்ற அலைவரிசைகளில் அறப்போதனைக்கு பதிலாக வேறு விடயங்கள் ஒளிபரப்பப்படுகின்றன.

ஊடக நிறுவனங்களுக்கு சொந்தக்காரர்களை அழைத்து ஊடகப் பயன்பாட்டில் உள்ள தவறுகள் பற்றிக் கூற வேண்டும். ஊடகவியலாளர்களுக்குச் சொல்வதால் பயனில்லை. அரசியல் வானொலி அலைவரிசையை வாங்கும் அரசியல் கட்சிகள் அவற்றை அதிக பணத்திற்கு விற்றுவிடுகின்றன. எங்களுடைய கட்சி அவ்வாறு எதையும் செய்யவில்லை.

**இந்தப் பிரசாரத்தில் நீங்களும் பங்குபற்ற முடியுமல்லவா?**

எல்லாவற்றுக்கும் என்னால் பங்குபற்ற முடியாது தொழிற்சங்க ரீதியான பணிகளில் தொழிற்சங்க மட்டத்தில் பங்குபற்ற முடியும். ஜனாதிபதி அவர்கள் தான் இதற்கு முன்வர வேண்டும்.

**நன்றி : சமாதான நோக்கு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச ஊழியர்கள் அசமந்தம் சமுர்த்தி பயனாளிகள் கலகம் மக்கள் பிரதிநிதிகள் மௌனம்

அரசாங்கத்தின் சமுர்த்தி நிவாரணத் திட்டம் மூலம் பயன் பெறுவோருக்கான தெரிவு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற கருத்து மக்கள் மத்தியில் பரவலாக காணப்படுகிறது. வடக்கு தெற்கு என்ற பேதமில்லாமல் நாட்டின் பல பகுதிகளில் போராட்டங்களும் இடம்பெற்று வருகின்றன. முன்னர் சமுர்த்தி நிவாரணம் பெற்ற பலரது பெயர்கள் விடுபட்டிருப்பதுடன், சமுர்த்தி நிவாரணம் பெற தகுதியுள்ள பலரது பெயர்கள் மீளாய்வு செய்யப்பட்டு உருவாக்கப்பட்டுள்ள புதிய பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை எனவும் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளவர்களிற் சிலர் சமுர்த்தி நிவாரணம் பெறும் அளவிற்கு பொருளாதார ரீதியில் பின்தங்கியவர்கள் அல்ல எனவும் மக்கள் மத்தியில் இருந்து குற்றச்சாட்டுக்கள் எழுப்பப்படுகின்றன.

ஏன்? எப்படி? இவ்வாறு நிகழ்ந்தது என பாதிக்கப்பட்டவர்கள் கேள்வி கேட்கிறார்கள். அதற்கு உரிய முறையில் பதிலளிக்க முடியாது சம்பந்தப்பட்ட கிராம மட்ட அரச ஊழியர்கள் திண்டாடுகின்றனர். ஆவேசப்படும் மக்களிடம் "இதையெல்லாம் நாங்கள் செய்யவில்லை நீங்கள் படிவங்களில் பூர்த்தி செய்து கொடுத்த தகவல்களின் படி கணனிகள் மூலம் கொழும்பிலிருந்து தெரிவுசெய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன" என தென்னிலங்கை மீது குற்றம் சுமத்தி வருகின்றனர். சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படுவதன் நோக்கம், அதற்காக பயன் பெறும் தகுதியுடையோர் யார் யாரென தெரிவுசெய்வதற்கு அரச அதிகாரிகள் கடைப்பிடிக்கப்படும் வழிமுறைகள் ஆகியனவற்றை உரிய அரச நிறுவனங்கள் பொது மக்களுக்கு தெளிவுபடுத்துவது அவசியமாகும்.

### மாவட்ட அரச அதிபர் சொல்வது ஒன்று நடைமுறை வேறொன்று

பொதுமக்களுக்கு அரசினால் சமுர்த்தி நிவாரணம் வழங்குவது தொடர்பான கணிப்பீட்டு படிவங்கள் 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டு அவை கிராம அலுவலர் பிரிவு ரீதியாக சமுர்த்தி உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், கிராம உத்தியோகத்தர் ஆகியோர் கொண்ட குழுவினர் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டதாகவும் இத் தகவல்கள் 2016 ஆம் ஆண்டு கணனியில் பதிவேற்றம் செய்யப்பட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம் மற்றும் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிலையம் ஆகிய 3 திணைக்களங்களினால் வரையறுக்கப்பட்ட 29 எடுகோள்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளியிடல் மூலம் நிவாரணம் பெறத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்பட்டு அப் பட்டியல்கள் மக்களின் பார்வைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளன என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் வெளியிட்டுள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பத்திரிகைச் செய்தியின் படி தகவல் திரட்டப்படும் போது விடப்பட்ட தவறுகளே மேலே குறிப்பிட்டவாறு தகுதியானவர்களின் பெயர்கள் விடுபட்டதற்கும், தவறான தெரிவுகள் உட்சேர்க்கப்பட்டிருப்பதற்கும் காரணம் என்பது நிரூபணமாகிறது.

கிராம மட்டத்தில் செயற்படும் சமுர்த்தி குழுக்களின் தலைமைப் பொறுப்பில் உள்ள ஒருவரே வீடுகளுக்கு வந்து தகவல்களை திரட்டியதாக பாதிக்கப்பட்ட சமுர்த்தி பயனாளிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு திரட்டப்பட்ட தகவல்ளை அடிப்படையாகக் கொண்டு தான் சமுர்த்தி நிவாரணம் பெறும் பயனாளிகள் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. இப்போது முழுப் பழியையும் கொழும்பிலுள்ள தலைமையகங்கள் மீது சுமத்தி சமுர்த்தி திணைக்களமே பயனாளிகள் பட்டியலை அனுப்பியதாகத் தெரிவிக்கப்படுவது எந்தளவிற்கு சரியானதாகும்?

### பயிரை மேயும் வேலிகள்! போராட வேண்டியவர்களாக மக்கள்!

யாழ் மாவட்டத்தில் காரைநகர், உடுவில், தெல்லிப்பளை பிரதேச செயலகங்கள் முன்பாகவும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வரணி சமுர்த்தி வலய அலுவலகம் முன்பாகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைத்துறைப்பற்று, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகங்கள் முன்பாகவும் சமூர்த்தி மீளாய்வினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி [illegible] போராட்டங்களை நடாத்தியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து யாழ் அரசாங்க அதிபர் விடுத்துள்ள அறிவித்தல் ஆகஸ்ட் 14 அன்று பத்திரிகைகளில் பிரசுரமாகியுள்ளது. இவ் அறிவித்தலின் படி பொதுமக்கள் தத்தமது பகுதி பிரதேச செயலகங்களில் சமுர்த்தி பயனாளிகள் தெரிவு தொடர்பான முறைப்பாட்டை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள், மேன் முறையீடுகள் பிரதேச செயலக வாரியாக நியமிக்கப்பட்டுள்ள பயனாளிகள் தெரிவுக்குழு மற்றும் மேன்முறையீட்டுக் குழு ஆகியவற்றினால் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்படும். படிவங்கள் மீள் திருத்தம் செய்யப்பட்டு கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு, சரியான பட்டியல் தயாரிக்கப்பட்டதன் பின்னரே புதிய பட்டியலின்படி சமுர்த்தி நிவாரணம் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். இது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சற்று ஆறுதல் தரும் செய்தியாகும்.

### இது போரால் அழிந்த பூமி சிறப்பான அக்கறை தேவை

சமுர்த்தி மீளாய்வு நடைமுறையானது முழு நாட்டுக்குமுரியது என்றாலும் அதனை போர் நடைபெற்ற இடங்களுக்கும் சேர்த்துப் பொதுமைப்படுத்துவது பொருத்தமானதல்ல. போரினால் ஏற்பட்ட இழப்புகளுக்கு இதுவரையில் இழப்பீடுகள் எதுவும் வழங்கப்படவில்லை. அத்துடன் போரினால் குடும்ப உறுப்பினர்களை இழந்த குடும்பங்களின் பொருளாதாரத்தை மீள் நிலைப்படுத்துவதற்கான உதவிகளும் வழங்கப்படவில்லை. இதைவிடக் காணாமலாக்கப்பட்





டோரின் குடும்பங்களுக்கான உதவித்திட்டங்களும் செயற்படுத்தப்படவில்லை. மேலும் போர் நடைபெற்ற பிரதேசங்களில் தொழில்வாய்ப்புக்களைப் பெறுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் சமுர்த்தி உதவியைத் திடீரென நிறுத்துவது உதவி பெறும் குடும்பங்களை நிர்க்கதிக்கு உள்ளாக்கும்.

ஆகவே, இங்கு சமுர்த்தி நிவாரணப் பட்டியல் தொடர்பான மீளாய்வு செய்யப்படுவதற்கு ஒரு கால நீட்சி தேவை. அதேவேளை மேலதிகமான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உதவிகளையும் வழங்குவது அவசியமாகும்

"சமுர்த்தி மீளாய்வு செய்யப்படும்" என்ற அறிவிப்பு வரும்போதே அரசியல் பிரதிநிதிகள் இந்த மக்களின் நிலைமையைக் குறித்து அரசாங்கத்துடன் பேசி விசேட ஏற்பாட்டைச் செய்திருக்க வேண்டும் என சமூக ஆய்வு பத்தி எழுத்தாளர் கருணாகரன் தெரிவித்துள்ள கருத்துக்கள் மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதாகவும் அவற்றுக்கு தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்துகின்றது.

### ஜனாதிபதியின் வாக்குறுதி நம்பிக்கை தரும் செய்தி

அரசாங்கம் எச்சந்தர்ப்பத்திலும் மக்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ மாட்டாது. சமுர்த்தி கொடுப்பனவு தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும். அதேநேரம் எவ்வித கொடுப்பனவும் கிடைக்காத இலட்சக்கணக்கான மக்கள் இந்த நாட்டில் உள்ளனர். இவர்களை அடையாளம் கண்டு அவர்களுக்கும் சமுர்த்தி கொடுப்பனவு வழங்குவது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி 11.08.2017 அன்று எம்பிலிபிட்டியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி பயனாளிகள் எண்ணிக்கையில் எந்தவிதமான குறைப்பும் மேற்கொள்ளப்படாது என சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க 11.08.2017 அன்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி பயனாளிகள் எண்ணிக்கை குறைக்கப்பட்டிருப்பதாகவும் அரசியல் உள்நோக்கத்துடன் பயனாளிகள் பட்டியல்களில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனா பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பிய போதே அமைச்சர் திஸநாயக்கா மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார்.

தென்னிலங்கை மக்களின் குரல்களுக்கு அவர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகள் உரிய மதிப்பளிக்கிறார்கள். உடனடியாக செயற்படுகிறார்கள். ஆனால், இங்கு சமுர்த்தி பயனாளிகள் தெரிவில் பாதிக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து யாழ்ப்பாணம், மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்கள் போராட்டங்களை நடாத்தியபோதும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றுமே அறியாதவர்கள் போல பாராளுமன்றத்தில் மௌனம் காத்து வருகின்றனர்.

சமூர்த்தி மீளாய்வினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆதரவாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடாத்தியுள்ளனர். தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள் என்பது தெரியவரவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனாவின் கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் திஸநாயக்கா சமுர்த்தி பயனாளிகள் தொடர்பான கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படுவதை ஒப்புக்கொண்டுள்ளார். அதேவேளை, சமூர்த்தி பயனாளிகளின் எண்ணிகை அதிகரிக்கப்படுமே தவிர குறைக்கப்படாது எனவும் தெரிவித்துள்ளார். இப்போது 14 இலட்சத்திற்கும் அதிகமான சமுர்த்தி பயனாளிகள் உள்ளனர் எனக் குறிப்பிட்ட அவர் கடந்த அரசாங்கம் சமுர்த்தி நிவாரணத்திற்காக 12 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருந்ததாகவும் தற்போதைய அரசாங்கம் இத் தொகையை 42 பில்லியன்களாக அதிகரித்திருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒதுக்கீட்டில் ஒரு சதவீதம் கூடக் குறையாது எனவும் சமுர்த்தி நிவாரணம் பெறுவதற்கு பொருத்த மற்றவர்கள் இருந்தால் அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

### மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பு

தென்னிலங்கை மக்களின் கொந்தழிப்பு தமிழ் மக்களுக்கு சமூர்த்தி நிவாரணம் தொடர்பாக ஏற்படவிருந்த இழப்புகளில் இருந்து மீள்வதற்கு வாய்ப்பாகியுள்ளது. எனினும் தமிழ் அரச உத்தியோகத்தர்கள் "தெய்வம் தந்தாலும் பூசாரி விடமாட்டான்" என நடந்து கொள்ளாமல் இருக்க வேண்டும். எவ்வாறாயினும் பொதுமக்கள் சமுர்த்தி நிவாரணம் தொடர்பிலான தமது ஆட்சேபனைகளை - முறைப்பாடுகளை யாழ் அரசாங்க அதிபர் குறிப்பிட்டவாறு பிரதேச செயலகங்களில் சமர்ப்பித்து பயனாளிகள் தெரிவில் ஏற்பட்டிருக்கும் குறைபாடுகளை மீள் பரிசீலனைக்கு உட்படுத்துவதற்கான வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, தமிழ் மக்களின் விடுதலை மற்றும் உரிமைகளின் பெயரில் வாக்குகளைப் பெற்று பதவிகளை அடைந்துள்ள மக்கள் பிரதிநிதிகளும் இனியாவது இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்திற்கு அழுத்தியுரைத்து அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்த வேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் சரியாக செயற்படுவதையும், சமுர்த்தி நிவாரணம் பெறத் தகுதியான அனைவரும் உரிய பயனைப் பெறுகிறார்கள் - பெறுவார்கள் என்பதனையும் நிச்சயப்படுத்த வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலமைச்சரின் முன்னெச்சரிக்கை ...

( 1 ம் பக்கத் தொடர்ச்சி )

தனின் கூட்டமைப்பு அதற்குப் பின்னர் தன்னை புறக் கணித்து விட்டு கொழும்புடனும் வெளிநாடுகளுடனும் தன்னிச்சையாக செயற்படுகின்றது என்று கண்ட விக்கினேஸ்வரன் தமிழரசு கட்சி முத்த தலைவர் களுக்கு எதிராக போர்க் கொடியைத் துக்கினார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கு சங்கடத்தை ஏற்படுத்தும் வகையில் விக்கினேஸ்வரன் செயற்பட்டது அனைவரும் அறிந்ததே.

அப்போது உசாரான தமிழரசு கட்சித் தலைமையா னது தமிழ் மக்கள் பேரவை, எழுக தமிழ் என செயற் படத் தொடங்கிய விக்கினேஸ்வரனை பதவியிலிருந்து விலக்கும் வேலைத் திட்டங்களில் இறங்கியது. இதன் பிரதான கட்டமாக விக்கனேஸ்வரனுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மான நாடகம் அரங்கேறியதுடன் அது மக்கள் மத்தியில் தமக்கு எதிரான பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடுமோ என்று அச்சம் கொண்ட சம்பந்தர் அந்த நாடகத்தை அடுத்த கட்டத் திற்கு நகராமல் பார்த்துக்கொண்டார். விக்கினேஸ் வரனின் பதவியும் காப்பாற்றப்பட்டது. தற்காலிகமாக சம்பந்தரின் கௌரவமும் காப்பாற்றப்பட்டது மேலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு உடனடியாகவே உடைந்து விடுமோ என ஏற்பட்ட நிலைமையும் தவிர்க்கப்பட்டது.

சம்பந்தரையும் சேனாதிராஜாவையும் சந்தித்து சமா தானம் செய்துகொண்டது போல விக்கினேஸ்வரன் செயற்பட்டாலும் வடக்கு மாகாண சபையிலிருது தமிழரசுக்கட்சியின் செல்வாக்கை கீழிறங்க செய்வதில் அவர் தீவிரமாக ஈடுபடத் தொடங்கினார். அதன் தொட ராக இப்போது வடக்கு மாகாணசபையின் அமைச் சரவையில் தமிழரசு கட்சிக்காரர் எவரும் இடம்பெறாத ஒரு நிலைமையை உறுதி செய்து கொண்டுள்ளார்.

நம்பிக்கையில்லா தீர்மான நாடகத்தின் போது தனக்கு ஆதரவாக இருந்த சுரேஸ் பிரேமச்சந்திரனின் தம்பி சர்வேஸ்வரனை அமைச்சராக்கியுள்ளார். சுரேஸ் பிரேமச்சந்திரன் தமிழரசுக் கட்சியின் பிரதான எதிரி யாக அரசியல் செய்து வருபவர்.

நம்பிக்கையில்லா தீர்மான செயற்பாடுகளின் போது விக்கினேஸ்வரனுக்கு ஆதரவாக மக்களை திரட்டிய தில் பிரதானமான பங்கை வகித்தது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கட்சியே அனந்தி சசிதரன் தமிழரசுக் கட்சியின் ஊடாக மாகாணசபைக்குள் புகுந்த போதி லும் அவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கருத் துக் களின்பால் எப்போதும் ஈர்ப்புடையவர் என்பது தெரிந்ததே!

எனவே, தமிழரசுக் கட்சியின் எதிர்ப்பையும் பொருட் படுத்தாது அனந்தி சசிதரனை விக்கினேஸ்வரன் அமைச்சராக்கியுள்ளார்.

அடைக்கலநாதன் செல்வத்தின் தமிழீழ விடுதலை இயக்கம் எப்போதும் தமிழரசுக் கட்சியோடு அணைந்து இருப்பதிலேயே கவனமாக இருந்து வருகிறது. அது தமிழ் மக்கள் பேரவையை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதோடு விக்கினேஸ்வரன் தொடர்பான விமர் சனமான நிலைப்பாட்டையே தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றது தமது கட்சியின் பிரதிநிதியாக வடக்கு மாகாணசபை அமைச்சர் டெனீஸ்வரனை தமது கட்சி யின் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியவில்லை என்பதனால் ரெலோவானது டெனிஸ்வரனை அமைச் சரவையிலிருந்து நீக்கும்படி கேட்டது. அத்துடன் டெனிஸ்வரன் தமிழரசுக்கட்சி தலைமையுடன் நெருக் கமாகி வருகிறார் என்பதனால் விக்கினேஸ்வரன் உடனடியாகவே டெனிஸ்வரனை அமைச்சரவையில் இருந்து நீக்கிவிட்டார். ஆனால், இந்த இடத்திற்கு மாற்று அமைச்சராக விந்தன் கனகரத்தினத்தை நியமிக்கும் படி ரெலோ கோரி வருகின்றது. தனக்கு ஆதரவாக ரெலோ இதுவரை இருக்கவில்லை என்ற உட்கோபம் விக்கினேஸ்வரனிம் இருப்பது தெரிகின் றது. இதனால் விக்கினேஸ்வரன் குணசீலனை அமைச்சராக்குகிறார். விக்கினேஸ்வரன் மீது ரெலோ வின் ஆத்திரம் மட்டுமே மிச்சமாகி உள்ளது.

புளொட் தலைவர் சித்தார்த்தன் சம்பந்தரோடு மரியா தையான உறவை சுமுகமாக பேணிக் கொண்டாலும் சேனாதிராசா மற்றும் சுமந்திரன் தொடர்பாக கடும் கடுப்புடன் இருந்து வருகிறார். இது விக்கினேஸ் வரனுக்கும் நன்கு புரிந்துள்ளது. மேலும் புளொட் அமைப்பு விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் பேரவை யில் ஆரம்பத்திலிருந்தே அங்கம் வகித்து வருகிறது.

விக்கினேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விடயத்தில் புளொட் அக்கறை காட்டவில்லை. எனவே, புளொட்டை தனது பக்கம் மேலும் இழுப்பதற் காகவும் அத்துடன் அதனை தமிழரசுக் கட்சிக்கெதி ராக தீவிரமாக நிறுத்துவதற்காகவும் விக்கினேஸ் வரன் தமது அமைச்சரவையில் புளொட்டின் வேண்டு கோளுக்கமைய பவன் என அழைக்கப்படும் சிவ நேசனை இணைத்துக்கொண்டுள்ளார். உண்மையில் முன்னாள் வவுனியா நகரசபைத் தலைவர் லிங்கநா தனை அமைச்சராக்கவே விக்னேஸ்வரன் திட்டமிட் டிருந்தர் இருப்பினும் தமிழரசு கட்சிக்கு எதிரான தனது திட்டத்தின் ஒரு பாகமாக விக்கினேஸ்வரன் தனது புதிய அமைச்சரவையில் புளொட்டை இணைத் துக் கொண்டுள்ளார்.

விக்கினேஸ்வரனுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபையேறாது போயினும் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் பெரும்பான்மையான உறுப் பினர்களின் நம்பிக்கையைப் பெறாதவராகவே இன்ன மும் உள்ளார். அதனை எந்த வேளையிலும் தமிழரசுக் கட்சி பயன்படுத்தும் என்பதை உணர்ந்து கொண் டுள்ள முதலமைச்சர் முன்னெச்சரிக்கையான நடவடிக் கைகளில் இறங்கியிருப்பதையே அவரது புதிய அமை ச்சரவை காட்டுகிறது. வடக்கு மாகாணசபை விடயத் தில் தமிழரசுக்கட்சியின் முத்தலைமைகள் விக்கி னேஸ்வரனிடம் தோற்றுப் போயிருப்பதே இன்று வரை உள்ள நிலைமை.

# மரணத்தை அல்ல ...

( 7 ம் பக்கத் தொடர்ச்சி )

(ii) கட்சிக்குள் வேண்டிய சீர்திருத்தங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நோக்கம் சம்பந்தமான. அது பற்றி உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நிவர்த்தி நடவடிக்கைகளுக்கான சில பரிந்துரைகளை உங்களது பரிசீலனைக்கு முன்வைப்பது.

I. நான் கட்சியிலிருந்து ராஜினாமா செய்யும் என் முடிவிற்குப் பின்னேயுள்ள காரணங்கள் :

எனது முடிவுக்கும். தேர்தல் முடிவுகளுக்கும் முற்றிலும் எதுவித சம்பந்தமும் இல்லை என்பதை ஆரம்பத்திலேயே தெளிவாக்க விரும்புகிறேன்.

கட்சியின் கொள்கை மற்றும் கருத்தியல் சம்பந்தமாக கட்சியுடன் எனக்கு எதுவித வேறுபாடுகளும் இல்லை எனபதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க விரும்புகிறேன். அவற்றைச் செயல்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் சம்பந்தமாக சில வேறுபாடுகள் தவிர்க்க முடியாது இருக்குந்தான்.-- இது எனக்கு மட்டுமல்ல. எங்களது பெருமளவான தோழர்களுக்கும் பொருந்தும்.

உட்-கட்சியின் சீர்திருத்தங்களுக்காகான போராட்டத்தில் என்னை ஈடு படுத்திக் கொள்ளாது. ராஜினாமா செய்யும் முடிவை நான் ஏன் எடுக்க வேண்டும் என நீங்கள் கேட்கலாம்.

அதற்கு எனது எளிமையான பதில்: ஒரு வருடத்திற்கும் மேலாக CCக்குள்ளும் PB க்குள்ளும் உள்ள பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய நான் முயற்சிகள் செய்திருக்கிறேன். ஆனால் அதில் தோல்வியுற்றுள்ளேன். பதிலாக. தன்னிச்சையான திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் மூலம் செயலாளர் நாயகம் மற்றும் அவரது "ஆலோசகர்கள்" ஆகியோர் மத்திய குழு/அரசியல் குழு/நிதி கட்டுப்பாடு கமிஷன் எடுக்கும் முடிவுகளை தலைகீழாக மாற்றும் செயற்பாடுகளே நடைபெற்றன. கட்சி எனக்கு வழங்கப்பட்ட கடமையை நான் ஆற்ற முடியாதவாறு தடைகளும் ஏற்படுத்தப்பட்டன.

சீர்திருத்தங்களுக்காகப் போராடுபவர்களை அவதூறு செய்வதும் அவர்களை ஓரங்கட்டுவதுமே அவர்களது போக்கு. அவர்களது இத்தகைய உத்திகளுக்கு பதிலளிக்க முனையின். அது கட்சியின் சிதைவுக்கே வழிவகுக்கும் என்பதே எனது பயம். அது எனது நோக்கம் அல்ல. கட்சியின் நலன் கருதி நான் ராஜினாமா செய்வதே சிறந்தது. ஆனாலும். கட்சியின் மீதான எனது அனுதாபமும் ஆதரவும் நீர்த்துப்போகாது இருக்கும்.

அன்பார்ந்த தோழர்களே! என் எதிர்கால திட்டங்கள் குறித்து:- இனப்பிரச்சினை. அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள். பொருளாதார வளர்ச்சி முதலியன தொடர்பான. ஆராய்ச்சி. கல்வி ஆகியவற்றிற்கு நான் திரும்ப உத்தேசித்திருக்கிறேன். "சாதாரண" வாழ்க்கைக்குத் திரும்புவது அவ்வளவு எளிதான விடயமல்ல. என் மனைவி. எனது கல்வித் தகைமைகள் மற்றும் கடந்த கால அனுபவம் ஆகியவை மட்டுமே இப்போது என் பலத்திற்கான ஆதாரங்கள். அத்துடன். தோழர் நாபாவின் எண்ணங்களுக்கு ஏற்புடைய தான பாதையில் எங்கள் கட்சி ஒரு நாள் மீண்டும் திரும்பும் என்ற என் நம்பிக்கையும் எனது பலத்திற்கு இன்னொரு ஆதாரமாகும். கட்சிமீதோ. அல்லது தோழர்கள் மீதோ நான் எதுவித வெறுப்பையும் கொண்டிருக் கவில்லை.

எனது விலகல் கட்சிக்குப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தாமையை உறுதி செய்யும் பொருட்டு. எனது ராஜினாமாவின் உண்மைக் காரணங் களைப் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தமாட்டேன். என் ராஜினாமா பற்றி ஒரு பத்திரிகைச் செய்தி வெளியிடுவது தவிர்க்க முடியாதது என நான் கருதும் பட்சத்தில். எனது வார்த்தைகள் கட்சிக்குச் சங்கடங்கள் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வேன் என உத்தரவாதம் அளிக்கிறேன்.

நான் உட்பட எல்லா மனிதர்களும் தவறு செய்யக்கூடியவர்களே என்பதால். மனிதர்கள் என்ற வகையில் அவர்கள் மீதான வெறுப்புணர்ச்சி எதனையும் நான் கொண்டிருக்கவில்லை. அவர்கள் மீதான எனது விமர்சனம் கட்சியின் செயலாளர் நாயகம். நிதித்துறைச் செயலாளர் என்ற கேதாவில் அவர்கள் செய்த தவறுகள் மீதானதே. அவ்வளவு தான்.

# சுத்தமான, சுகாதாரமான ...

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

பொது இடங்களில் குப்பை கூழங்களை உரிய காலத் தில் அகற்றி சுத்தம், சுகாதாரத்தை பேணுதல்,

பொது கழிவு நீர் கால்வாய்களை துப்புரவு செய்தல்,

உணவு மற்றும் உணவுப் பொருள் விற்பனை நிலையங்கள் சுத்தத்தையும் சுகாதாரத்தையும் பேணும் வகையாக கட்டாயமான முறைகளை  கடமைகளை அமுலாக்குதல்,

தனியார் வீடுகளில், காணிகளில் சுத்தம் பேணப்படுவதை உறுதி செய்தல்,

மாநகர குடியிருப்பாளர்களின் வீடுகள், காணிகளி லிருந்து குப்பை கூழங்களை கிரமமாக அகற்று வதற்கான ஏற்பாடுகளை செய்தல்,

பொது நீர்நிலைகளை நுளம்புகளற்றவையாகவும் சுத்தமானவைகளாகவும் பராமரித்தல்,

போன்ற பல்வேறு கடமைகள் - பொறுப்புகள் மாநகர சபைக்கு உரியனவாகும். இவை அனைத்தும் பொறுப் போடு ஒட்டு மொத்தமாக நிறைவேற்றப்படுகிற போதே மக்கள் வாழும் சுற்றுச் சூழல் சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் இருக்கும்.

மாநகர சபை தனது கடமைகளை முறையாக, முழு மையாக நிறைவேற்ற முடியாமைக்குக் காரணங் களை அடுக்குவதுவும், குடிமக்கள் மீது தனது அதி காரங்ளைப் பிரயோகிப்பதில் குடிமக்களின் எந்தவித காரணங்களையும் செவி மடுக்காது அதிகார தோர ணையோடு செயற்படுவதுவும் சரியானதல்ல.

"அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி" என்பது போல அரச நிறுவனங்களே மக்களுக்கு உதாரணங்களாக அமைய வேண்டும்.

யாழ் மாநகர சபை பொது இடங்களிலிருந்து குப்பை களை அகற்றுவதற்கும், பொது கழிவுநீர் கால்வாய் களை சுத்தமாக வைத்திருப்பதற்கும், நகரில் ஒழுங் கையும், சுத்தத்தையும், சுகாதாரத்தையும் பேணுவதற் கும் திணறிக்கொண்டிருப்பதையே காணமுடிகிறது.

வீதிகளில் குப்பைகளை போட வேண்டாம் என எச்சரிக்கும் மாநகர நிர்வாகம் வீடுகளிலிருந்து அவற்றை உரிய காலத்தில் எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்வதில்லை என மாநகர குடியிருப்பாளர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

சமையலறை கழிவுகளை வீட்டிற்குள்ளேயே எத்தனை நாட்களுக்கு வைத்திருக்க முடியும் என்ற அவர்களின் கேள்வியில் ஆவேசம் கொப்பளிக்கிறது. வீடுகளுக்குள் அவற்றை புதைப்பதும், எரிப்பதும் கூட பாதுகாப்பான முறையல்ல என்பது ஒருபுறமிருக்க மாநகரசபை பிர தேசத்திலுள்ள அநேக குடியிருப்புக்களில் அதற்கான இடவசதியும் கூட இல்லை.

குடியிருப்பாளர்கள் தமது வீட்டுக் கழிவுகளை போடு வதற்கான பொது இடங்களை வழங்காமலும், ஒவ் வொரு குடியிருப்பாளரும் அக்கழிவுகளை அகற்று வதற்கு மாநகர சபை ஊழியர்கள் ஒத்துழைக்காத நிலையும் இருக்கும் போது குடிமக்கள் பொது இடங் களில் ரகசியமாக எறிந்து விட்டுப் போவதையே தெரிவு செய்வார்கள். அதனையே பழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இது தவறே என்றாலும் தட்டிக் கேட்கும் தார்மீக தகுதியை மாநகர சபை இழந்து விடுவிறது.

எனவே, உள்ளூராட்சி நிர்வாகத்துக்கும் பொதுமக் களுக்கும் இடையே இவ்விடயத்தில் ஒரு கூட்டுறவு தேவைப்படுகிறது. உண்மை நிலவரங்கள் சரியாக கண்டறியப்பட்டு சரியான முறைகள் வகுக்கப்பட வேண்டும். மாநகர சபை வட்டாரங்கள் தோறும் "சுத்த மான, சுகாதாரமான, பசுமையான யாழ்ப்பாணம்" எழுச்சி பெறுவதற்கான சமூக பிரதிநிதித்துவ அமைப்பு கள் உருவாக்கப்பட வேண்டும். ஆவற்றிற்கு உரிய அங்கீகாரத்தை மாநகர நிர்வாகம் வழங்கி காத்திர மாக அவை செயற்பட வழி வகுக்க வேண்டும்.

ஒரு மாநகரத்தை சுத்தமாக வைத்திருப்பது வெறு மனே ஒரு அரச நிர்வாகக் கடமையல்ல. அது சமூகக் கடமை. இந்த விடயங்களில் மாநகர சபை நிர்வாகமும் பொது மக்கள் அமைப்புக்களும் அக்கறையோடு செயற்படாதவரை சுத்தமான, சுகாதாரமான, பசுமை யான நகரத்தில் வாழ்வது சாத்தியமாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரோஹிங்யா இனத்தின் அவலம்



பிரித்தானியா, யப்பான் இரண்டினதும் பிடிக்குள் சிக்குண்டிருந்த பர்மா 1948 இல் சுதந்திர நாடானது. பிரித்தானியாவின் காலனித்துவத்திலிருந்து விடுதலை பெற்ற போதிலும் பர்மாவில் 1962 தொடக்கம் இராணுவ சர்வாதிகாரமே கோலோச்சியது. பர்மா என்ற பெயர் 1989 இல் மியன்மர் என மாற்றப்பட்டது. நீண்ட சிறைவாசத்தின் பின் விடுதலை பெற்ற ஆங் சாங் சூகி 2015 இல் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து அங்கு இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்தது.

மியான்மரின் மேற்கு பிராந்தியமான ரக்கினே பகுதியில் தான் இனப்படுகொலையை எதிர்கொண்டுவரும் ரோஹிங்யா முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். மியான்மரில் 10 இலட்சம் போர் வாழ்வதாக கூறப்படுகிறது.

ரோஹிங்யா இன முஸ்லிம்கள் 15 ஆம் நூற்றாண்டிலிருந்து மியான்மரில் வாழ்ந்து வரும் பூர்விக குடிகள் என வரலாற்றியலாளர்கள் தெரிவித்திருப்பதாக கூறப்பட்ட போதும் இவர்கள் பங்களாதேஷிலிருந்து வந்து குடியேறியவர்கள் என அங்கு பெரும்பான்மையாக வாழும் தேரவாத பௌத்தத்தை பின்பற்றும் மதவாதிகளால் குற்றம் சுமத்தப்படுகிறார்கள். இதுவே, இங்கு இன வன்முறைகளுக்கு அடிப்படையாகவும் அமைந்திருக்கிறது.

1921 ஆம் ஆண்டு குடிசன மதிப்பு எடுக்கப்பட்டதாகவும், ரோஹிங்யா என்ற சொல் அப்போதய ஆவணங்களில் கூட இடம்பெற்றிருக்கவில்லை என்று வாதம் முன்வைக்கப்படுகிறது. ஆனால், உள்நாட்டுக் கலவரங்களால் அண்டைநாடுகளுக்கு இடம்பெயர்ந்த இந்த மக்கள் காலனித்துவ காலத்திலேயே மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டார்கள் என்கின்றனர் இந்தமக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்கள்.

இந்த மக்களை வந்தேறு குடிகளாகக் கருதும் மியான்மர் அரசாங்கம் இவர்களின் குடியுரிமை உட்பட அடிப்படை உரிமைகளை மறுத்து வருகின்றது.

மியான்மரில் பல இனக் குழுக்கள் சார்பில் போராளி அமைப்புக்கள் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியும் தனி அரசு கோரியும் போராட்டங்களை நடாத்தி வருகின்றன.

ரோஹிங்யா விடுதலை கட்சி (Rohingya Liberation Party - RLP) 1974 இல் ஆரம்பிக்கப்பட்டது. தனி அரசை கோரிய இந்த இயக்கம் செயலிழந்துள்ள நிலையில் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டதாகக் கூறப்படும் அரகன் ரோஹிங்யா இரட்சிப்பு இராணுவம் (Arakan Rohingya Salvation Army - ARSA) தனி அரசு கோரி போராடி வருகிறது. பங்களாதேஷ் எல்லைப்பகுதியில் எல்லை பாதுகாப்பு நிலைகள் மீது இவர்கள் நடத்திய தாக்குதல்களே தற்போதய வன்முறைகள் வெடிக்கக் காரணம் எனச் சொல்லப்படுகிறது. இதனால் 3 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் 2 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் உள்நாட்டிலும் அண்டைநாடுகளுக்கும் இடம்பெயர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மனிதாபிமான உதவி மற்றும் மனித உரிமை அமைப்புக்கள் எதுவும் குறித்த பிரதேசத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் மியான்மர் அரசு இவற்றை மறுத்திருக்கிறது.

அமைதிக்கான நோபல் பரிசினை வென்ற ஆங் சாங் சூகி, முக்கியத்துவம் வாய்ந்த பதவி வகிக்கும் ஆட்சியில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான வன்முறைகள் தலைவிரித்தாடுவது குறித்து பலத்த கண்டனங்கள் எழுந்துள்ளன. "என்னுடைய நாடு மிகவும் சிக்கலான நிலையில் உள்ளது. எமது நாடு பல இன மக்களை கொண்ட நாடு. நாம் இப்போது அமைதியான நிலைப்பாட்டில் இல்லை. எங்களுடைய நாட்டில் பல்வேறு இனக்குழு ஆயுத மோதல்கள் இன்னும் உள்ளது. எங்களுடைய நாட்டின் வளர்ச்சியை நிலையாக உருவாக்குவதற்கு அமைதி வேண்டும்." என்று ஆங் சாங் சூகி குறிப்பிட்டுள்ளார்.

ஐ.நா வும், பங்களாதேஷ், துருக்கி, மலேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளும் மியான்மரில் இடம்பெறும் மனிதாபிமானமற்ற வன்செயல்களுக்கு எதிராக தமது பலத்த கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ரோஹிங்யா சம்பவங்களைக் கண்டித்து காத்தான்குடி, அக்கரைப்பற்று பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும், பேரணிகளும் இடம்பெற்றுள்ளன. முஸ்லிம் மக்களை அப்புறப்படுத்திய வடக்கில், யாழ்ப்பாணத்திலும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் இடம் பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இனரீதியாகவும், மத ரீதியாகவும் சகமனிதர்கள் எங்கு அடக்கு முறைக்கு ஆளாகினாலும் அதற்கு எதிராக குரல்கொடுப்பது மனித குலத்தை நேசிக்கும் மனிதாபிமானங்கொண்ட அனைவரதும் அடையாளமாகும்.

# வெலிக்கடையில் கொல்லப்பட்ட போராளிகள் நினைவாக ..

1983 யூலையில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட 53 தமிழ் அரசியல் கைதிகளோடு தோழர்கள் பாஸ்கரன், தேவகுமார் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர். தோழர்கள் பாஸ்கரன் தேவகுமார் ஆகிய இருவரதும் 34 வது ஆண்டு நினைவுதினம் அவர்களது சொந்த ஊரான நற்பிட்டிமுனையில் தமிழர் சமூக ஜனநாயக கட்சி தோழர்கள் சலீம், சசி ஆகிய இருவரதும் முன்முயற்சியுடன் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட தோழர்களின் பங்களிப்புடன் 27.07.2017 அன்று நடைபெற்றது.

தோழர் சசி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவு தின நிகழ்வில் தோழர்கள் பாஸ்கரன், தேவகுமார் ஆகியோரது உருவப்படங்களை தாங்கிய பதாகைக்கு தோழர் பாஸ்கரனின் சிறிய தாயாரும், சென்னையில் தோழர் பத்மநாபாவுடன் படுகொலை செய்யப்பட்ட தோழர் கவிதாவின் தாயாரும் தீபம் ஏற்றி அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.





அதனைத் தொடர்ந்து நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

இதனைத் தொடர்ந்து தலைமை உரையாற்றிய தோழர் சசி தமிழ் மக்களின் விடிவிற்கான போராட்டத்தில் ஆரம்ப காலங்களிலேயே பங்கேற்று, கல்வி கற்கும் வாய்ப்புக்களையும் இழந்து திருக்கோவிலில் கைது செய்யப்பட்ட தோழர்கள் பாஸ்கரன் தேவகுமார் இருவரும் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டார்கள் அவர்கள் இருவருக்கும் அவர்களோடு படுகொலை செய்யப்பட்ட ஏனையோருக்கும் எமது அஞ்சலியை உரித்தாக்குகிறோம்.





13 வது திருத்தத்தின் அடிப்படையில் தோழர் பத்மநாபா தலைமையில் செயற்பட்ட எம்மால் கட்டமைக்கப்பட்ட வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை ஊடாக தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முனைந்த போது பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியும் -தமிழீழ விடுதலைப் புலிகளும் தமக்கிடையே ஏற்படுத்திக் கொண்ட உடன்பாட்டின் பிரகாரம் மாகாணசபை கலைக்கப்பட்டது. எமது தோழர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தக் கொலைவெறி முள்ளிவாய்க்காலில் தான் முடிவுக்கு வந்தது. இதன் பின்னர் தமிழ் தேசியம் பேசி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற தமிழ் மாகாணசபை மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணத் தவறிவிட்டார்கள். அம்பாறை மாவட்டத்தின் 4ம் கொலனி கிராமம் 3 தடவைகள் அழிக்கப்பட்டது. 500 க்கும் மேற்பட்ட வீடுகள், விவசாயப் பயிர்கள் அனைத்தும் இல்லாமலாக்கப்பட்டன. இதுவரை காலமும் அக்கிராமத்து மக்களுக்கு வீடுகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை. அந்த மக்கள் பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, நற்பிட்டிமுனை, கல்முனை, பாண்டிருப்பு போன்ற இடங்களிலேயே இன்னமும் வசித்து வருகின்றனர்.

பத்மநாபா ஈபிஆர்எல்எவ் கட்சியினராகிய நாம் எமது கோரிக்கைகளிலும், போராட்ட வழிமுறைகளிலும் செய்து கொண்ட மாற்றங்களுக்கு ஏற்றவிதமாக தமிழர் சமூக ஜனநாயக கட்சி என எங்களது கட்சியின் பெயரை மாற்றிக்கொண்டிருக்கிறோம். இந்த நாட்டில் இன, மத பேதமின்றி, பாரபட்சங்களற்று அனைத்து இன மக்களும் சுபிட்சமாக வாழ வழி செய்வதே எமது இலக்காகும். இங்கு சிங்கள மக்கள் இணங்காமல் தமிழ் மக்களுக்கு தீர்வு கிடைக்காது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும் எனவும் அவர் தனது தலைமை உரையில் தெரிவித்தார்.

இங்கு உரையாற்றிய தோழர் சலீம், நான் ஒரு முஸ்லீம் தமிழ் இளைஞர்களோடு இணைந்து எனது புரட்சிகர பயணம் தொடர்கிறது. இந்தியாவில் தோழர் பத்மநாபாவுடன் படுகொலை செய்யப்பட்ட தோழர் கமலன் (மிஹிலார்) எனது சகோதரன். நான் சிறுவனாக இருந்தபோது ஈபிஆர்எல்எவ் கட்சியின் உறுப்பினராக இருந்த அவர் மாக்ஸிஸ-லெனினிஸ சித்தாந்தத்தின் வழியில் தமிழ் முஸ்லிம் இளைஞர்கள் இணைந்து வர்க்க வேறுபாடற்ற ஏற்றத்தாழ்வற்ற சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். அவரது மறைவுக்கு பின்னர் தமிழ் முஸ்லிம் உறவை வளர்க்க வேண்டும், போராட்டத்தில் உயிர்நீத்த தோழர்களின் நம்பிக்கைகள் வென்றெடுக்கபட வேண்டும், நிர்கதியாகிப்போன அவர்களின் குடும்பங்களுக்கு உதவவேண்டும் என்ற எண்ணத்தோடு கட்சியில் இணைந்து செயற்பட்டு வருகிறேன்.

கிழக்கிலே இனவாதம் பேசி மக்களை ஏமாற்றி அரசியல் இலாபம் அடைய முனையும் போர்வழிகள் இருக்கிறார்கள். இனவாதத்திற்கு இடமளிக்காமல் தமிழ் முஸ்லிம் மக்கள் இனவாதத்திற்கு எதிரான எமது கட்சியான தமிழர் சமூக ஜனநாயக கட்சியை பலப்படுத்த எல்லோரும் சேர்ந்து உழைப்போம் என்று தெரிவித்தார்.

மேலும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த தோழா குகன், தனது தந்தை சண்முகம், தோழர் பத்மநாபாவின் தலைமையின் கீழ் போராட்டத்திற்கு பங்களிப்பை வழங்கிய ஒரு போராளி எனவும் தானும் அவரது பாதையில் தொடர்ந்து பயணிப்பதாகவும் தெரிவித்தார் போராட்டத்தில் உறுதியாக நின்று பாரிய பங்களிப்பை செய்த படுவான்கரை போன்ற இடங்கள் இன்னும் கல்வியிலும் இதர அடிப்படை வசதிகளிலும் பின்தங்கிய நிலையில் இருப்பது பற்றியும் தனது உரையில் குறிப்பிட்டார். இடப்பெயர்வுகள் பாராளுமன்றம், மாகாணசபை போன்றவற்றில் தமிழர் பிரதிநிதித்துவத்தை மிகவும் பாதித்து வருவதாகவும் சுட்டிக்காட்டினார். அக்கரைப்பற்றிலிருந்து வந்து கலந்து கொண்ட தோழர் பாஸ்கரனும் இந்நிகழ்வில் உரையாற்றினார். தோழர் தாஸ் நன்றி கூறி நிகழ்வை நிறைவு செய்தார்.

## தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி

தி. சிறிதரன் 294, கண்டி வீதி, யாழ்ப்பாணம். அவர்களால் இல 78, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் மலர் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org